# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 Euro0.50

வாரஇதழ் இதழ்: 77 25.02.2014



## பொதுநலவாய நாடுகளின் செயற்பாட்டுக் குழுத்தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச!

பொதுநலவாய நாடுகளின் 2015 ஆண்டு அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்பாட்டுக் குழுவின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சம்பந்தப்பட்ட குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், சைப்ரஸ், கிரனடா, சியாராலியோன், டொங்கோவா, தன்சானியா ஆகிய நாடுகளில் தலைவர்கள் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

# அந்தமான் தீவுகளில் விடுதலைப் புலிகள்?




## இந்தியா எச்சரிக்கை!!

இந்தியாவின் நிக்கோபர் மற்றும் அந்தமான் தீவுகளில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருக்கக் கூடுமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அதிகாரிகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எஞ்சிய போராளிகள் தங்கியிருக்கக் கூடும் என்ற கருத்தை மறுப்பதற்கில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.மக்கள் வாழாத பல தீவுகள் அந்தமான் நிக்கொபர் தீவுத் தொகுதியில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தீவுகளை புலி உறுப்பினர்கள் பயன்படுத்தி பதுங்கியிருக்கக் கூடுமெனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(11ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்படும் காலம் நீடிப்பு!

வடக்கு, கிழக்கிலிருந்து காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக குழுவின் செயற்படும் காலம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2014 ஒகஸ்ட் 12ஆம் திகதி வரை 6 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துத் பிரதேசங்களிலிருந்தும் மேற்படி ஆணைக்குழுவுக்கு 16,000 முறைப்பாடுகள் கிடைக்கப பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முறைப் பாடுகளை பதிவு செய்யும் முதற்கட்ட நடவடிக்கை கடந்த 17ஆம் திகதியுடன் நிறைவுற்றது. கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கிளிநொச்சியில் முறைப்பாடுகள் பதியப்பட்டன.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதக் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவை தலைவராகக்

(11ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகள் தொடரும்!

வடக்கு கிழக்கில் மாகாணங்களில் வாழும் போரில் துன்பங்களை அனுபவித்த மக்களுக்கு தேவையான சகல வசதிகளையும் வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுக்கும் என அதன் ஆசிய பிராந்திய தூதுவர் டேவிட் டாலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக

(11ம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமர்வில் கியூபா இலங்கையை ஆதரிக்கும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஆதரவளிக்கப்படும் என கியூபா அறிவித துள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தற்போது கியூபாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

கியூபா விஜயம் செய்துள்ள அமைச்சர் சுசிலிடம், அந்நாட்டு துணை ஜனாதிபதி மிகியுல் டயாஸ் கானெல் இந்த உறுதி மொழியை அளித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படு த்திக்கொள்வது தொடர்பிலும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

# நல்லிணக்க முனைப்புக்களுக்கு ஒத்துழைப்பு அவசியம் - ஜாலிய

இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசிய மானது என அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்கு உலக சமூகத்தின் ஒத்துழைப்பு முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இலங்கையின் மைந்தர்களுக்கு ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



நாடு நெருக்கடிகளை எதிர்நேர்ககியிருக்கும் இந்த தருணத்தில் அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இலங்கை மைந்தர்களின் ஒத்துழைப்பு நாட்டுக்கு அவசியமாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கர்கள் நாடு தொடர்பிலான சரியான விளக்கத்தை ஏனையோருக்கு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு இலங் கையரும், நாட்டின் நன்மதிப்பு தூதுவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய கட்டிடத் தொகுதி

கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு 27 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டிடத் தொகுதியொன்று கிளிநொச்சி 155 ஆம் கட்டைப்பகுதியில் அமைக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார்.

இரண்டு அடுக்குகளைக் கொண்ட இந்தக் கட்டிடத் தொகுதியினை அமைப்பதற்கான பணிகள் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பமாகியதுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்படுமென எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மீன்பிடித் திணைக்களம் தற்போது ஒரு தனியார் கட்டிடத்திலேயே இயங்கி வருவதாகவும் நிலையான கட்டிடத்தில் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை இயங்குவதன் மூலம் கிளிநொச்சி மாவட்;டத்திலுள்ள 4000 மீனவக் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வீட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 150 குடும்பங்கள் இந்திய வீட்டுத்திட்டம் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் திருமதி எழிழரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இந்திய வீட்டுத் திட்டத்திற்காக 15 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 441 குடும்பங்கள் விண்ணப்பித்திருந்து அவர்களின் விபரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

இருந்தும், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, குடும்ப உறுப்பினர்களின் வயது ஆகியவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அதில் கூடிய புள்ளிகள் பெற்ற 8 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 குடும்பங்களே இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, அனலைதீவு வடக்கில் 7 வீடுகளும், அனலைதீவு தெற்கில் ஒரு வீடும், பருத்தியடைப்பில் 19 வீடுகளும், கரம்பன் மேற்கில் 41 வீடுகளும், கரம்பனில் 13 வீடுகளும், நாரந்தனை வடமேற்கில் 45 வீடுகளும், நாரந்தனையில் 5 வீடுகளும், புளியங்கூடலில் 19 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான செயன்முறை விளக்கக்கூட்டம் கடந்த வாரம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது, குறித்த வீடுகளை 6 இலிருந்து 8 மாதங்களுக்குள் கட்டி முடிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டோம் என பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## அபிவிருத்தித் திட்டங்கள்

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பணிப்புரைக்கமைய கிராமிய மட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் பங்கேற்பு ராதியான அபிவிருத்தி திட்டங்களுக்கான தரவுகள் சேகரிக்கும் பணிகள் மன்னார் நகரசபை பிரிவுக்குட்;பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகரசபை உறுப்பினர் இ.குமரேஸ் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கடந்த வாரம் கீரி, பட்டித் தோட்டம் ஆகிய கிராமங்களைக் கொண்ட பிரிவிலும் சாவக்கட்டு பிரிவிலும் மூர்வீதி பிரிவிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட 15 கிராம அலுவலகர் பிரிவுகளை 03 பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பிரிவுக



ளுக்கும் நகரசபை உறுப்பினர்கள், கிராம அலுவலகர்கள் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டு 05 தினங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கான தரவுகள் சேகரிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

மேற்படி பிரிவுகளிலுள்ள மக்களைச் சந்தித்து முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் அவர்களிடமே தரவுகள் சேகரிக்கப்படும். பின்னர் அவுஸ்திரேலியாவின் நிதியுதவியை பெற்று தேவையான அபிவிருத்தி திட்டங்களை மக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

## துவிச்சக்கரவண்டிகள்

கிளிநொச்சி இராணுவ தலைமைகத்தினால் வறுமைப்பட்ட குடும்பங்கைள சேர்ந்த மாணவர்கள் 34பேருக்கு கடந்த



வாரம் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது.

ஒஸ்திரிய நாட்டுப் பெண்மணியான ராணி பயரின் நிதி பங்களிப்பில் கிளிநொச்சி இராணுவ ஒத்துழைப்பு மையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க, ஒஸ்திரிய நாட்டு பெண்மணி ராணி பயர் மற்றும் கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதிகள், பிரிகேடியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## அபிவிருத்தி செயற்திட்டம்

கல்முனை தமிழ் பிரிவுக்குட்பட்ட 29 கிரம சேவகர் பிரிவுகளுக்கும் தலா பத்து இலட்சம் வீதம் மக்கள் நலன்சார் செயற்றிட்டங்களுக்கு வழங்குதல் எனவும் இந்நிதியினை கொண்டு அந்தந்த கிராம மக்கள் அவர்களது கிராமங்களில்



முன்மொழியப்படும் பொதுவான அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் கல்முனை அபிவிருத்திக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.எச். பியசேன தலைமையில் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தை பிரதேச செயலாளர் கே. லவநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை கல்முனை தமிழ் பிரிவுக்குட்பட்ட கல்வி அபிவிருத்தி, சுகாதார மேம்பாடு, போக்குவரத்து சீராக்கல், மணல் வீதிகளை கிறவல் இட்டு புனரமைப்பு செய்தல், மின்சார வசத்தியில்லாமல் உள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குதல் போன்ற விடையங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் மாகாணசபை உறுப்பினர்களான ரி.கலையரசன், எம்.ராஜேஸ்வரன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜனாப். ஹப்பார் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பி.இராஜகுலேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


## வாழ்க்கைத் திறன்பயிற்சி

யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இரண்டாயிரம் இளைஞர் யுவதிகளுக்கான வாழ்க்கைத்திறன் விருத்தி பயிற்சிகள் கறுக்காமுனை, இலங்கைத்துறை, பூநகர், வெருகல் மற்றும் பூமரத்தடிச்சேனை ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சேவாலங்கா நிறுவனத்தின் வளவியலாளரான ஏ.எஸ்.மஹ்றூப் தெரிவித்தார்.

மேற்படி பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கே இப்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

இப்பயிற்சி நெறி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

'பாடசாலையில் கற்கும் உயர் வகுப்பு மாணவர்கள், பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டோர் மற்றும்



உயர் கல்வியைத்; தொடர்வோர் என இந்த இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இந்த வாழ்க்கைத் திறன்விருத்திப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சமூக உறவுகள், முன்மாதிரி, தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறமைகள், பிரச்சினைகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்களில் இவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாயிரம் இளைஞர் யுவதிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போதுவரை சுமார் 1000 இளைஞர் யுவதிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்' என தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# நடைமுறைச் சாத்தியமான தீர்மானம் வேண்டும்!

வடமாகாணசபை எதைச் செய்கின்றதோ இல்லையோ, ஒரு வரலாற்றுச் சாதனை ஒன்றைச் செய்யத்தான் போகின்றது.

பல வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள எட்டு மாகாண சபைகளும் செய்யாத சாதனை ஒன்றை வடமாகாணசபை செய்யப்போகின்றது. இலங்கையில் அதிகூடிய தீர்மானங்களை நிறைவேற்றிய மாகாண சபை என்ற பெருமையைப் பெறப்போகின்றது.

வட மாகாணத்திலுள்ள கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பண்ணை அமைக்கவேண்ம் என்று தீர்மானம் நிறைவேற்றியமை குறித்து ஏற்கனவே இந்தப் பந்தியில் குறிப்பிட்டிருந்தோம். கடந்த வாரம் நடைபெற்றுமுடிந்த கடைசி மாகாணசபைக் கூடத்திலும் வழக்கம்போல ஏராளமான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

பலாலிக்கும் திருச்சிக்கும் இடையே விமானச் சேவையை நடாத்தவேண்டும் என்ற பிரேரணை இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றபப்பட்ட உச்சக்கட்ட பிரேரணை.

இந்தப் பிரேரணையைப் பற்றிய செய்திகளை படிக்கின்ற தமிழ் மக்கள், ஆகா நமது மாகாணசபை எப்படியெல்லாம் துரிதமாக வேலை செய்கின்றது என்ற திருப்தியில் மக்கள் இப்போது திளைத்திருப்பார்கள். நமது தேவைகள் ஒவ்வொன்றாக தேடித்தேடி தீர்த்து வைக்கிறார்களே என்ற மகிழ்ச்சி வேறு மக்களுக்கு ஏற்படலாம்.

இத்தனை வசதிகள் இருக்கின்ற இந்த மாகாண சபையை இதுவரை காலமும் நாம் ஏன் கைப்பற்றாமல் இருந்தோம் என்ற கவலையும் மக்களுக்கு ஏற்படலாம்.

நியாயமான கவலைதான். ஒரு சபையில் ஆளும் கட்சி, அதுவும் ஐந்தில் நான்கு பலத்துடன் இருக்கும் ஒரு ஆளும் கட்சி தீர்மானம் நிறைவேற்றுகின்றது என்றால் அது நிறைவேறக் கூடிய தீர்மானம்தான். செய்யக் கூடிய ஒன்றைத் தானே நமது பிரதிநிதிகள் தீர்மானமாக நிறைவேற்றுவார்கள் என்று மக்கள் நினைப்பதிலும் தவறில்லை. இந்த தீர்மானங்களில் பலவற்றை சபைக்கு கொண்டுவருபவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்கள். பாராளுமன்ற நடைமுறைகளைத் தெரிந்த ஒருவர் மாகாணசபையில் தீர்மானம் கொண்டு வருகின்றார் என்றால் அது சாதாரண விடயமல்ல. மக்களுக்கும் தன்மேல் அதீத நம்பிக்கை ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

மாகாண சபையின் அதிகாரத்திற்கும் வருகின்ற சிறிய விடயங்களைக் கூட செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற ஒரு சபை தன்னால் முடியாத காரியங்களை தீர்மானங்களாக புதிதுபுதிதாக நிறைவேற்றுவதை விடுத்து முதலில் நிறைவேற்றிய தீர்மானங்களில் தங்களால் செய்யக் கூடியவற்றில் எவை எவை அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது குறித்து முதலில் ஆராய் வேண்டும்.

உதாரணமாக மாகாண சபையின் அதிகாரிகளின் வாகனங்களிலுள்ள பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழிக்கு முதலில் இடம் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் அது அமுல்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும். இதுபோன்ற சிறிய காரியங்களைக் கூட செய்துமுடிக்கத் திராணியற்று இருக்கும் ஒரு மாகாணசபை, தமது வரம்பிற்கு உட்படாத விமானப் போக்குவரத்து தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுவது மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே முடியும். விமானப் போக்குவரத்து என்பது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதுவும் வெளிநாட்டுக்கான விமானப் போக்குவரத்து என்பது தேர்தலில் வெற்றி பெற்றதும் வெடி கொளுத்துவது போன்ற சமாச்சாரம் அல்ல. குறைந்தது அவ்வாறு விமான சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு மத்திய அரசைக் கோருவது என்று தீர்மானம் நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்பியிருந்தாலும் பரவாயில்லை. அதனைக் கூட தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பி விட்டு தமது வேலை முடிந்தது என்று இருப்பதை விடுத்து, அதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து கோரிக்கை வைத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

# பலாலி - தமிழ்நாடு நேரடி விமானசேவை வடமாகாண சபை தீர்மானம்!




பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு மீண்டும் நேரடி விமானசேவை நடத்தப்படவேண்டும் என வடமாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 6 ஆவது அமர்வு கைதடியிலுள்ள வடமாகாண சபைக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற போதே இந்த பிரேரணை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் சமர்ப்பிக கப்பட்டது. இதனை மற்றொரு உறுப்பினரான கந்தையா சர்வேஸ்வரன் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

'வடக்கிலுள்ள பலாலி கிழக்கிலுள்ள திருமலை விமான நிலையங்களிலிருந்து இந்தியாவிற்கு நேரடி விமானசேவை நடத்தப்படவேண்டும். காங்கேசன்துறை துறைமுகம் வர்த்தகத்துறைமுகமாக மாற்றப்படவேண்டும். அத்துடன், தலைமன்னார் வரையில் ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையில் மீண்டும் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய பிரேரணையினையே சிவாஜிலிங்கம் சபையில் சமர்ப்பித்தார்.

யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியினில் அத்தகைய விமான சேவைகள் பலாலியிலிருந்து முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்குழு: ஆய்வுக்கு அழைப்பில்லை

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு


உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு தமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பொறிமுறைமை குறித்து ஆராய்வதற்காக தென் ஆபிரிக்கா விஜயம் செய்யுமாறு தமி;ழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அந்நாட்டு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான ஓர் அழைப்பு தென் ஆபிரிக்க அரசாங்கத்திடமிருந்து தமக்கு உத்தியோகபூர்வமாக இதுவரையில் கிடைக்கவில்லை என சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று தென் ஆபிரிக்கா விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கூட்டமைப்பு சந்திப்பு

பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் தமி;ழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன், கடந்த வாரம் வட மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.



வடக்கின் தற்போதைய நிலைமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், உயர்ஸ்தானிகருக்கு விளக்கம் அளித்துள்ளனர். இந்த சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவண பவன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH

# UNSG commends Lanka for hosting World Conference on Youth 2014



UN Secretary General Ban Ki-moon shakes hands with Ambassador Dr. Palitha Kohona, Permanent Representative of Sri Lanka to the UN.

Youth Affairs and Skills Development Minister Dullas Alahapperuma and Chairman/ Director General of the National Youth Services Council Attorney – at – law Lalith Piyum Perera are also present.

The UN Secretary-General Ban Ki-moon commended Sri Lanka's initiative to host the World Conference on Youth (WCY) in May 2014- the first ever global youth conference in Asia. The WCY will seek to mainstream youth concerns in the post-2015 development agenda.

He made the remarks when a Sri Lankan delegation led by Minister of Youth Affairs and Skills Development Dullas Alahapperuma called on him at the UN Headquarters in New York yesterday (Feb 18) to hand over the invitation of President Mahinda Rajapaksa for him to attend the World Conference on Youth in Colombo.

The Secretary General emphasised that youth were one of his key priorities in the programme that he had outlined at the commencement of his second term. "More than half the world's population is under the age of 25, so this is a "youth world", the UNSG said. He highlighted the urgency of resolving the huge burden of unemployment and providing political and economic opportunities to youth. "I am impressed by what Sri Lanka has been doing for the advancement of the youth". He recalled the comments of the UN High Commissioner of Human Rights Navi Pillay of the impressive success of the Youth Parliament of Sri Lanka.

He thanked the President of Sri Lanka for the invitation and said that he would make every effort to be in Colombo for this unique event despite his busy schedule.

Minister Alahapperuma expressed his gratitude for the continued assistance given by the UN system and the Secretary-General's Envoy on Youth with regard to the arrangements for the Colombo Conference. "As a nation, we believe that the Youth Conference will help in rebuilding the nation. The 'Colombo Youth Action Plan' – the outcome of the Conference which will be jointly produced by the youth and the policymakers would serve as a guideline to meet youth aspirations in many multilateral processes in the post-2015 era. This action plan will cover seven fundamental issues and seven thematic areas that have been recognized as vital for youth engagement in the global development agenda", he added.

Ambassador Dr. Palitha Kohona, Permanent Representative of Sri Lanka to the UN, said that, "youth are today's concern, not tomorrow's. They contribute to electing governments and in the formulation of national policies. Their concerns and aspirations could be addressed only by recognizing their input to policy-making and empowering them. That is why the Government of Sri Lanka has set up a task force of 20 global young leaders to prepare the key components of the conference arrangement".

Minister Alahapperuma presented the UNSG with copies of the recently launched "Youth Policy of Sri Lanka" and the publication on "Youth and Development: Realizing the Millennium Development Goals for Sri Lankan Youth".


Chairman/Director General of the National Youth Services Council Lalith Piyum Perera also spoke about the successful conclusion of the Commonwealth Youth Forum in Hambantota, last November.

Christopher Dekki and Jayathma Wickramanayake – Members of the International Youth Task Force for the conference - explained the ongoing logistics arrangements for the 1,500 delegates expected to attend the conference and the inclusive multi-stakeholder consultations on the draft outcome document.

courtesy: island

# If PM cannot get justice, how will the common man get justice:

## Rahul Gandhi on release of Rajiv Gandhi's assassins



Rahul Gandhi today said he was sad over the Tamil Nadu government's decision to set free all the seven people convicted in the assassination of his father and former Prime Minister Rajiv Gandhi.

The Congress Vice President, who was 21 when Rajiv was killed by a suicide bomber at an election rally in Sriperumbedur, near Chennai, on May 21, 1991, at the same time said he was not in favour of death penalty. "I am sad the killers are being released," Rahul said with a tinge of emotion, while noting that the assassins of his father, who worked for the rights of the people, were being set free.

Rahul also said that if a Prime Minister, who sacrificed his life for the nation, does not get justice how will a common man get justice. "If some person kills the PM and is released then how will a common man will get justice. It's a point to ponder," he said while addressing a gathering at Purab village here in Jagdishpur. "In this country even the PM does not get justice. This is my heart's voice," he said.

Rahul said he does not believe in capital punishment as it won't bring his father back. "I don't believe in capital punishment as it won't bring my father back. But it is not just a matter of my father or the family, it is the matter of the country," he added.

Tamil Nadu Government today decided to set free within three days all the seven convicts in the Rajiv Gandhi assassination case after the Supreme Court commuted the death penalty of three assassins. Besides Santhan, Murugan, the husband of Nalini, Perarivalan, who earned a major reprieve from the apex court yesterday which spared them from gallows, Nalini, Robert Pious, Jayakumar and Ravichandran would walk out from prison.

Chief Minister J Jayalalithaa, who took the decision for early release of the Rajiv killers at an emergency Cabinet meeting convened this morning over the issue, made a suo motu announcement in the state assembly.

Courtesy:DNA india

# Lanka, Japan hold key talks

Sri Lanka and Japan have had key discussions on various issues including issues of mutual relevance and importance to both the countries.

The discussions took place between Admiral WasanthaKarannagoda, Ambassador of Sri Lanka to Japan, and Seiji Kihara, Parliamentary Vice Minister of the Ministry of Foreign Affairs of Japan.



The two dignitaries underscored the significance of the visits of His Excellency the President of Sri Lanka to Japan, the former and current visits of the Deputy Prime Ministers of Japan to Sri Lanka, and the visit of Princess Tsuguko of Takamado to Sri Lanka as well as of other Cabinet Ministerial visits taken place between the two countries.

Both the Vice Minister and the Ambassador acknowledged that these visits and ensuing discussions with the relevant counterparts have further strengthened and deepened the relations between the two countries, particularly during the last couple of years.

In the economic sphere, the Ambassador added that over USD 550 million worth of investments, both foreign direct investments and foreign institutional investments, have been committed by the corporates and industries of Japan during past few years, reflecting the potential of the economy of Sri Lanka. He further added that the tourism from Japan to Sri Lanka has doubled during the last three years. The Vice Minister placed on record his appreciation to the Embassy for the assistance extended during the Great East Japan Earthquake.

The two dignitaries discussed, in detail, some of the key infrastructure projects including that of the maritime cooperation between the two countries and the intrinsic utility of it to both the countries.

courtesy:(Colombo Gazette)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ் தேசிய வாதிகள் கவனம் கொள்ள வேண்டிய வன்னி மக்களின் அதிருப்திகள்

தமிழ் பேசும் மக்கள் எனும் பரந்துபட்ட ஒரு சொல்லாடலை அடிப்படையாக கொண்டு கட்டமைக்கப்பட்டதே தமிழ் தேசியம் ஆகும்.இந்த தமிழ் தேசியமே இந்த மக்களின் விடுதலைக்கு அடிப்படையான கோட்பாடு என கடந்த பல தாசப்தங்களாக எமது மக்களும் நம்பி கிடக்கிறார்கள்.இதன் பொருள் சாதி,மத,பிரதேச ,பாலின மற்றும் இத்தியாதி இத்தியாதி வேறுபாடுகள் ஏதுமின்றி தமிழ் என்னும் மொழியின் பெயரில் நாம் சமத்துவமாக கூடி வாழ்வோம் என்பதே ஆகும்.

அப்படியானால் எமது தமிழ் தேசிய விடுதலைக்கு வழிகாட்டும் தலைவர்கள் இந்த சமத்துவத்தை நோக்கி செயற்பட வேண்டுமல்லாவா? சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகாலாமாக தமிழ் தேசியம் பேசும் நமது பெரிசுகள் இந்த ஒற்றுமையை நோக்கி என்னென்ன செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்? தேர்தலின் போது தமிழர்களை ஒன்றாக அணி திரட்டுவது மட்டுமே தமிழர்களிடம் ஒற்றுமையையும் சமத்துவத்தினையும் நிலைநாட்டிவிடும் என்று நாம் நம்பலாமா? அதன் பின்னர் ஏழைகளும், பாமரர்களும்,சாமானியர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் எல்லாமும் பெற்று வாழும் வரங்களை பெற்றவர்களாகி விடுகிறார்களா? நிட்சயமாக அப்படியொரு அதிசயமும் இதுவரை நிகழ்ந்ததும் இல்லை.இனி நிகழப் போவதுமில்லை. வருடாவருடம் தந்தை செல்வாவின் நினைவு தினம்,பிறந்த தினம் என்று அரசியல் செய்யும் இந்த பெரிசுகள் தமிழ் பேசும் மக்களின் விடுதலை என்று கனவு கண்ட அந்த செல்வாவின் கனவை நிறைவேற்ற இதுவரை என்னென்ன கருமங்கள் ஆற்றியுள்ளனர்?

வடமாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் இதோ தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்அதுவே நமது மக்களின் விடுதலைக்கான ஒரே வழியென்ற பிரச்சாரங்கள் வானைப் பிளந்தன. அதன்படியே மக்களும் ஒழுகினர். ஒற்றுமையின் பெயரால் ஒன்றாகிய மக்கள் இன்று ஒன்றாக நடாத்தப் படுகிறார்களா?வன்னி பெருநிலப்பரப்பு போர் தின்ற பிரதேசம்.அங்கு வாழும் மக்கள் வஞ்சிக்கப்பட்ட மனிதர்கள். வடமாகாணசபை ஆட்சி அந்த மக்களுக்கு இதுவரை என்ன செய்தது? என்றால் யாரிடம் என்ன பதில் உண்டு?

மாகாணசபை ஆட்சியமைக்க முன்பே மாங்குளத்தில் வடமாகாணசபை அமைக்கும் முனைப்புக்கு எதிரான சதி திட்டமிடப்பட்டது.இன்று ஜனாதிபதியுடனும் ஆளுனருடனும் சேர்ந்து வேலை செய்யமுடியாது என்று அடம் பிடிக்கின்ற கூட்டமைப்பினர் வெற்றி வாகை சூடமுன்பே அவர்களின் கையை பிடித்தார்களோ காலில் விழுந்தார்களோ தெரியாது ஆனால் கைதடியில் வட மாகாண சபைக்கான புதிய கட்டிடம் அமைப்பதில் வெற்றிகண்டுவிட்டனர்.இது வன்னி மக்களுக்கு விழுந்த முதல் அடியாகும்.அதை தொடர்ந்து அமைச்சரவை தெரிவுகளில் ஏற்பட்ட இழுபறிகள் சொல்லி மாளாதவை.வன்னிமக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்று கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் டெலோ அதிருப்தி தெரிவித்து அதன் தலைவர் அடைக்கலம் செல்வநாதன் தனது பதவிகளை இராஜினாமா செய்ய போவதாய் அறிவித்து புழுதியை கிளப்பினார். இடையில் ஒருதடவை முதலமைச்சர் மாங்குளத்தில் மாகாண சபை அமைவதுதான் நல்லது என்று எங்கோ பேசிய செய்தியை கேட்டு ஐயோ இந்த மனுஷன் மட்டுமாவது நேர்மையாக யோசிக்குது என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு என்னதான் இருந்தாலும் நீதிமான் நீதிமான் தான் என்று செய்தியை படித்த எனக்கு னக்கிவாரி போட்டது.யாழ்ப்பாணத்தில் தண்ணீர் தட்டுப்பாடாம் அதனால மாங்குளத்தில் மாகாண சபை அமைவதுதான் நல்லதாம் என்றல்லவோ அந்த மனுஷன் பேசியிருந்தார்.அடிரா செருப்பால எண்டானாம்.



இப்படித்தான் வன்னிமக்கள் மீதான தமிழ் தலைவர்களின் அக்கறைகள் நமக்கு புல்லரிக்கிறது.

இப்போது வன்னியிலிருந்து இந்த யாழ்ப்பாணத்து கனவான்களின் மேலாண்மை அரசியல் பற்றிய அதிருப்திகள் பகிரங்கமாக தொடங்கியுள்ளன.

மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் பெற்று அதிகாரத்துக்கு வந்துள்ள சில அரசியல்வாதிகள் சமூகத்தில் நிலவும் படிநிலை ஏற்றத்தாழ்வுகள்இ பாரபட்சங்கள் போன்றவற்றை பாதுகாக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஒரு அதிகாரம் மிக்க பதவிக்கோ சமுக அந்தஸ்து மிக்க இடத்துக்கோ யார் யார் நியமிக்க படவேண்டும் என்பதில் இந்த மேலாண்மைவாதம் செல்வாக்கு செலுத்துவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அதே போன்று கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயத்திற்கு உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர்களை நியமிக்குமாறு பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாகாண கல்வி அமைச்சரை கேட்டதற்கு அவர் ஆசிரியர்களை வழங்குவது சிரமமாக உள்ளதாகவும் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் அல்லது முழங்காவில் பாடசாலைக்கு செல்லுமாறும் பணித்திருக்கிறார்.இதற்கு பதிலளிக்கும் முகமாக அதே ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மாணவர்களுக்கு கற்பிப்தற்கான ஆசிரியர்கள் இல்லை என்று சொல்லதற்கு ஒரு அமைச்சர் தேவை

**மட்டுநகரிலிருந்து**
**எழுகதிரோன்**

யில்லை. என தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் தேவைக்கதிகமாக ஆசிரியர்கள் உள்ள நிலையில் அதனை வன்னி மக்களுடன் பங்கிட்டுக்கொள்ள அவர்களுக்கு மனமில்லை.பின்தங்கிய பிரதேச மாணவர்கள் முன்னிலைக்கு வந்துவிடக்கூடாது என்ற அவர்களின் அடி மனப்பதிவுகளின் செயற் பாடுகளே அவை எனவும் தெரிவித்து ள்ளமை முக்கியமானது.

யுத்தம் முடிந்த பின்னர் கடந்த ஆண்டிலும் ஒருதடவை அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவின் முயற்சியில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் வன்னிசென்று கற்பிக்க வேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபட்டபோது அதற்கு பிரதியுபகாரமாக இந்தியா கட்டித்தரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளில் ஒருபகுதியை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உலகபுகழ் பெற்றவர்கள் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் என்பது பலருக்கு நினைவிருக்கலாம்.

உண்மையில் வன்னிமக்களின் உபாதைகளில் குளிர்காய்ந்து பதவிகளில் அமர்ந்துவிட்ட இந்த கூட்டமைப்பினர் இவற்றுக்கு முடிவுகட்டவெண்டும். அந்த மக்களை இப்படி மாற்றாந்தாய் மனோநிலையில் நடாத்துவது முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். இலங்கையின் அரச உத்தி யோகங்கள் என்பது முழு இலங் கையிலும் சென்று கடமையாற்ற பணிக்கப்பட்டவையேயாகும்.அந்த காலத்தில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் இலங்கையின் சகல பிரதேசங்களுக்கும் சென்று மாதக்கணக்கில் வருடக்கணக்கில் தங்கியிருந்து கடமையாற்றி உள்ளனர்.ஆனால் இன்று வட மாகாணத்துக்குள்ளேயே உள்ள வன்னிக்கு போகமாட்டேன் என்றால் அதை கேட்டு மெளனம் காக்கிறதாம் வட மாகாணசபை.காரணம் இந்த வாத்திமாரதானாம் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரச்சாரகர்களாக முன்னின்று செயல்பட்டவர்கள்.இதுதான் தமிழரின் ஆட்சியின் லட்சணம்.இந்த கோதாரி மாகாணசபை வரமுன்பு பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் போன்றவர்களின் முயற்சியில் மத்திய கல்வியமைச்சர் ஊடாக பல வேலைத் திட்டங்கள் கிளிநொச்சியில் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுத்த பட்டுள்ளது. இப்போ கல்வியதிகாரம் என்பது மாகாண சபைகளுக்கு உட்பட்டதால் அந்த சந்தர்ப்பங்களும் மறுக்கப்பட்டுவிட்டன. தமிழருக்கு கிடைத்த கல்வியதிகாரம் இப்படித்தான் செயல்படுமென்றால் எதற்கு இந்த அதிகாரங்கள்?

வன்னி மக்கள் இப்படி வஞ்சிக்கபடுவதை எதிர்த்து குரல் கொடுக்கும் சந்திரகுமாரையும் தவநாதனையும் பிரதேச வாதிகள் என்று கூட்டமைப்பினர் விரைவில் குற்றம் சுமத்துவார்கள். இப்படி முஸ்லிம் மக்களை அவர்களின் குறைகளை கேட்க மறுத்து அவர்களை துரோகிகள் தொப்பி பிரட்டிகள் என்று தூற்றியதன் பலனை யாம் அறிவோம். கிழக்குமாகாண மக்களிடம் இருந்து இந்த குரல்கள் பிறந்தபோது அதனை துரோக பட்டம் கொடுத்து படுகொலைகளை ஏவிவிட்டதன் பலனையும் யாம் அறிவோம். ஆகவே இந்த வன்னி மக்களின் அதிருப்திகள் சிறுசிறு விடயங்கள் அல்ல. தமிழ் தேசிய தலை மைகள் என்று தங்களை சொல்லி கொள்பவர்கள் கவனம் கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சனைகள். உண்மையிலேயே தமிழ் தேசியம் என்று பேசுகின்ற ஒவ்வொருவரும் இந்த வன்னி பிரதேசத்தின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டுக்கும், அந்த மக்களுக்கு மறுக்கபடுகின்ற சமுக நீதிக்குமாய் குரல் கொடுக்க முன் வரவேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வட மாகாணத்தின் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்று கும்பலோடு கோவிந்தா போட்ட அனைவருக்குமான கடமையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் புலி ‘சக்கை சியாம்’ விபரிக்கிறார்!



உலக விடுதலைப் போராட்டக் குழுக்களிலேயே முதன் முதலாக வான் படையை கட்டியெழுப்பியவர்கள் புலிகள்அமைப்பு மட்டுமே. அதனால் வான் புலிகள் என்பதனை மிக பலம் பொருந்திய ஒன்றாகவே அதீத கற்பனைகளை கொண்டதாக அன்றைய காலத்தில் சர்வதேசமும் இந்தியாவும் நம்பியிருந்தனர் என்பதும் உண்மை

கடந்த வாரத் தொடர்ச்சி

பாகம்: மூன்று

**புலிகள் உலகாளவிய ரீதியில் போதைப் பொருள் கடத்தியதாக பாகம் ஒன்றில் கூறியிருந்தீர்கள். எந்தெந்த நாடுகள் ஊடாக போதைப் பொருள் கடத்தல் நடை பெற்றது என விளக்க முடியுமா?**

ஆசியாவில் ஏன் உலகிலேயே மலிவாகவும், இலகுவாகவும் போதைப் பொருட்கள் கிடைக்குமிடமாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது. இங்கு ஏற்றுமதிக்கெனவே போதைப் பொருட்கனை பயிரிடுகிறார்கள். அமெரிக்க சோவியத் யூனியன் பனிக்கால யுத்தத்தின்போது ரஸ்ய இராணுவத்தினரிற்குள் பரப்புவதற்காக அமெரிக்க உளவமைப்பே இந்த போதைப் பொருள் உற்பத்தியினை ஆப்கானிஸ்தானில் ஊக்குவித்திருந்தனர். ஆப்கானிஸ்தான் மற்றும் ஆப்கான் எல்லையாக உள்ள பாகிஸ்தான் கிராமங்களில் உற்பத்தியாகும் போதைப் பொருட்களிற்கும். இமய மலைச் சாரலில் இயற்கையாக விளையும் கஞ்சாவிற்கும் மேலை நாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. அவற்றை தரை மற்றும் கடல் வழியாக மும்பைக்கு கொண்டு வரப் பட்டு அவை சரக்கு கப்பல்கள் மூலம் மேற்கு நாடுகளிற்கு பயணமாகும்.

## புலிகளின் தலைமைக்கு: “ஆயுதங்கள் வந்து கொண்டிருக்கவேண்டும் சண்டை நடந்து கொண்டிருக்க வேண்டும்”

**எந்த வருடத்தில் இருந்து புலிகள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டனர்?**

எண்பதுகளின் ஆரம்பத்திலேயே சிறிய அளவில் புளொட் அமைப்பும் புலிகளும் போதைப்பொருள் கடத்தலை தொடங்கியிருந்தாலும் 84 ம் ஆண்டு புலிகள் உறுப்பினர்கள் சிலர் மும்பையை மையமாக வைத்து கடத்தலை தொடங்கிய பின்னரே பரவலடைந்தது. சாதாரண கப்பல்கள் மூலமாக போதைப்பொருள் கடத்தலானது தொடங்கப்பட்டது. பின்னர் அவர்களே சொந்தமாக கப்பல்களை வாங்கி உலகளாவிய ரீதியில் செய்யத் தொடங்கியிருந்தனர்.

**புலிகளின் இந்த போதைப் பொருள் வலையமைப்பை பொறுப்பாக நின்று வழி நடத்தியவர் யார்?**

இது பல குழுக்களாக இயங்கியது. அதில் தெற்கு புன்னாலைக் கட்டுவனை சேர்ந்த சிறி என்பவர் முக்கியமானவராக நேபாளத்தில் இருந்து இயங்கினார். ஒரு தடைவை இந்திய எல்லைப் படையினருடன் நடந்த மோதல் ஒன்றில் கொல்லப்பட்டுவிட்டார் .

**போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு இறந்த புலிகளுக்கும் மாவீரர் பட்டம் வழங்கப்பட்டதா?**

யாரிற்கும் மாவீரர் பட்டம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அது மட்டுமல்ல ஆயுதக் கப்பல்கள் தாக்கப்பட்டு அதில் இறந்துபோனவர்கள், விபத்தில் மற்றும் கடுமையாக நோய்வாய்ப்பட்டு இயற்கை மரணம் அடைந்த எவருமே முறையாகப் பெயர்கள் அறிவிக்கப்பட்டு மாவீரர்களாக கௌரவிக்கப்படவில்லை. விதிவிலக்காக கிட்டு சென்ற கப்பலில் இறந்தவர்களும் இறுதி சமாதான காலத்தின் போது தாக்கியழிக்கப்பட்ட ஒன்பது கப்பல்களில் இரண்டு கப்பல்களில் பயணித்தவர்களின் பெயர் விபரங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டு அவர்கள் மாவீரர்களாக கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

**இப்படியாக எத்தனை பேர் இறந்து போயிருப்பார்கள் என நினைக்கிறீர்கள்?**

நூற்றியிருபதிற்கும் அதிகமானவர்கள் இறந்திருப்பார்கள் என நினைக்கிறேன். புலிகளின் தலைமை அவர்களை மாவீரர்களாக அறிவித்திருக்காவிட்டாலும். புலிகளின் ஆயுதத் தேவைகளிற்காக போதைப் பொருள் வியாபாரத்திலும் ஆயுதக் கடத்தல்களிலும் ஈடுபடும்போது கடலில் இறந்து போனவர்களிற்காக அவர்களோடு சேர்ந்து இயங்கிய நண்பர்கள் சிலர் நிக்கோபர் தீவுக்கூட்டத்தில் மனிதர்களற்ற ஒரு சிறு தீவில் அவர்களிற்கு ஒரு நினைவிடம் எழுப்பி அதில் அவர்களது பெயர்களை பதிவு செய்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.


**போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட புலிகளுக்கும், புலிகளின் தலைமைக்கும் இடையான உறவு எப்படி இருந்தது?**

புலிகளின் தலைமைக்கு ஆயுதம் வந்து சேர்ந்தால் சரி என்கிற நிலைமை. அது எப்படி வந்தது எங்கிருந்து வந்தது என்ன வழியாக வருகின்றது என்று ஆராய்கின்ற அவசியம் எல்லாம் இருக்கவில்லை.அவரைப்பொறுத்தவரை ஆயுதங்கள் வந்து கொண்டிருக்கவேண்டும் சண்டை நடந்து கொண்டிருக்க வேண்டும். அவரை நான் அடிக்கடி துப்பாக்கி மட்டும் தூக்கத் தெரிந்த அப்பாவி அண்ணன் என்று சொல்வதுண்டு.

**வெளிநாடுகளில் புலிகள் மீதான தடை ஏற்பட்டதற்கு, புலியெதிர்ப்பாளர்கள் மற்றும் மாற்றும் மாற்றுக் கருத்தாளர்களின் பங்கும் பெரியளவில் இருந்ததாக கருதுகிறீர்களா?**

இல்லை. புலிகள் மீதான தடைக்கு இந்த மாற்றுக் கருத்தாளர்களின் பங்கு என்பது ஒரு சதவீதம் இருக்குமா என்பது கூட சந்தேகமேயாகும். இந்த மாற்றுக் கருத்தாளர்கள் அல்லது புலியெதிர்ப்பாளர்கள் எனப்ப டுவோர், புலிகளிடம் ஜனநாயகம் இல்லை, அவர்கள் வன்முறையாளர்கள், படுகொலை செய்கிறார்கள் என வெளிநாடுகளில் கூட்டம் போட்டு பேசியும். பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியும், மனித உரிமை அமைப்புக்களிற்கு புகார் அனுப்பிக்கொண்டும் இருந்தார்கள். ஆனால், இவற்றால் புலிகள் மீதான தடை என்பது சாத்தியமாகவில்லை. ஏனெனில் இவர்களிற்கு புலிகள் அமைப்பினுள் என்ன நடக்கின்றது என்பது சரியாக தெரிந்திருக்கவில்லை. அதே நேரம் அனேகமான ஐரோப்பிய நாடுகள் புலிகள் மீது மென்மை போக்கை கடைப்பிடித்திருந்ததோடு பல தனிப்பட்ட அரச மட்ட தொடர்புகளும் புலிகள் அமைப்பு சுதந்திரமாக இயங்கவும் வழி வகுத்திருந்தது. ஆனால் இந்த மென்போக்கை புலிகள் அமைப்பும் அவர்களது வெளிநாட்டு பொறுப்பாளர்களும் சரியாக பயன் படுத்திக் கொள்ளவில்லை. வெளிநாடுகளில் பொறுப்பாக இருந்தவர்களிற்கிடையேயான போட்டிகளும், பொறாமைகளாலும் அவர்களே உள்ளே நடக்கும் இரகசியங்களை வெளிநாட்டு காவல் துறையினரிடம் போட்டுக் கொடுத்தார்கள். தாங்களே குட்டி நீதிமன்றம் போல் செயற்பட்டு வெளிநாடுகளில் தமிழர் பிரச்சனைகளிற்கு தீர்ப்பு கூறி தண்டனை கொடுத்தார்கள். இதனால் பாதிக்கப்பட்டவன் காவல்துறையில் போய் புகார் கொடுக்கத் தொடங்கினான். இவை எல்லாவற்றையும் விட பெரிய எதிர்ப்பு புலிகளிற்கு எதிராக சர்வதேசத்தில் உருவாகக் காரணம் புலிகளின் கரும்புலி தாக்குதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதும், தொடர்ந்தும் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட சிங்கள, தமிழ் ஆயுதம் தாங்காத அரசியல்வாதிகள் கொல்லப் பட்டதுடன், தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை புலிகள் தரப்பே குழப்பியதுமே மிகப் பாரதூரமான குற்றங்களாக சர்வதேசம் பார்த்தது. அது மட்டுமல்லஇறுதியாக நடந்த பேச்சுவார்த்தைகளின்போது இந்த தடைகளை நீக்கி சுதந்திரமாக பேச்சுவார்த்தையில் புலிகள் ஈடுபடுவதற்கு சர்வதேசமும் இந்தியாவும் இரண்டு விடயங்ளை நிறைவேற்றுமாறு புலிகளிடம் கேட்டிருந்தார்கள்.

அவையிரண்டையும் புலிகளின் தலைமை நிராகரித்து விட்டிருந்தது மட்டுமல்லாமல் காலையில் பேச்சுவார்த்தைகளின் போது மேசையில் புலிகள் தரப்பு தாங்கள் சமாதானத்திலும் பேச்சு வார்த்தையிலும் உறுதியாக இருக்கிறோம் வன்முறையில் எமக்கு விருப்பம் இல்லையென்று சர்வதேசத்திடம் கூறி விட்டு, மாலையில் புலம்பெயர் தமிழர்களின் கூட்டங்களில் தமிழ்ச்செல்வன் உரையாற்றும் போது இனி வரப் போவதுதான் இறுதி யுத்தம். யுத்தம் மூலமே தீர்வு ,எனவே தமிழர்கள் அனைவரும் தாராளமாக நிதியை வழங்குங்கள் எமக்கு பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கையில்லையென்று உரையாற்றுவார்.



அப்போது கை தட்டல் வானைப் பிளக்கும். இப்படிப் பேச வேண்டாம் வெளிநாட்டு புலனாய்வு பிரிவுகள் இவற்றை பதிவு செய்யும் என்று பல தமிழ் பத்திரிகையாளர்கள் தமிழ்ச்செல்வனிடம் எடுத்தும் சொல்லியிருந்தார்கள். அதற்கு அவரின் பதில் 'அவங்கள் விசரங்கள் கிடக்கட்டும்' என்பதாகவே இருந் தது. இதனால்தான் சர்வதேசம் புலிகளிடம் கடுமையாக நடந்து கொள்ளவேண்டி வந்தது.

**சர்வதேசமும் இந்தியாவும் புலிகள் மீதான தடையை எடுப்பதற்கு இரண்டு விடயங்களை முன் வைத்தாக கூறினீர்களே, அவை என்ன?**

பேச்சுவார்த்தை காலத்தில் புலிகளோடு அதிகார பூர்வமாக சர்வதேச தரப்பில் ஒரு குழு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது இன்னொரு குழுவினர் புலிகளின் இன்னொரு வெளிநாட்டு பிரிவினருடன் இரகசியமாக நோர்வேயில் பேச்சுவார்த்தை ஒன்றையும் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் புலிகளிடம் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர். முதலாவது கரும்புலிகள் அமைப்பை முற்று முழுதாக கலைத்து விடவேண்டும். இரண்டாவது வான் புலிகள் அமைப்பை கட்டியெழுப்பும் முயற்சிகளை தற்காலிகமாக கைவிட வேண்டும் என்பதே. இங்கு இன்னொன்றை கவனிக்க வேண்டும் உலக விடுதலைப் போராட்டக் குழுக்களிலேயே முதன் முதலாக வான் படையை கட்டியெழுப்பியவர்கள் புலிகள்அமைப்பு மட்டுமே. அதனால் வான் புலிகள் என்பதனை மிக பலம் பொருந்திய ஒன்றாகவே அதீத கற்பனைகளை கொண்டதாக அன்றைய காலத்தில் சர்வதேசமும் இந்தியாவும் நம்பியிருந்தனர் என்பதும் உண்மை. இந்த கோரிக்கைகளை புலிகளின் தலைமை மறுத்திருந்தது. பேச்சு வார்த்தை காலங்களில் மனிதவுரிமை அமைப்புக்களின் அழுத்த ங்களிற்கு பணிந்து குழந்தைப்போராளிகள் பலரை பத்திகையாளர்களின் முன்னால் விடுவித்ததைப் போல கரும்புலிகள் அமைப்பை கலைக்காவிட்டாலும், ஒரு ஒப்புக்காகவேனும் பத்திரிகையாளர்கள் மற்றும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினரின் முன்னால் ஒரு தொகை கரும்புலிகளை சாதாரண படையில் இணைத்து கரும் புலிகளை கலைத்து விட்டதாக புலிகளின் தலைமை அறிக்கையொன்றை விடச் சொல்லி பலர் வைத்த கோரிக்கையை புலிகளின் தலைமை கடுமையாக மறுத்து விட்டிருந்தது. அடுத்ததாக உலக நாடுகளில் இருந்து புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு முதலாவதாக இந்தியா தனது தடையை நீக்கவேண்டும்.அதற்கு ராஜீவ்காந்தியின் கொலை ஒரு பெரும் தடையாகவும், இந்தியாவிற்கு பெரிய கௌரவ பிரச்சனையாகவும் இருந்தது. புலிகள் மீதான இந்தியாவின் தடையை நீக்குவதற்கு பொட்டம்மானை தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு இந்திய அரசு சார்பில் கோரிக்கை வைத்தார்கள். பொட்டம்மானை ஒப்படைத்ததன் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியத் தரப்பு கேட்கக் கூடாது என்று எழுத்து மூலம் தரவேண்டும் என்றும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவர்கள் கேட்டுக கொண்டிருந்தனர். இந்த விபரங்களும் புலிகளின் தலைமைக்கு அறிவிக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையும் சுவரில் எறிந்த பந்தைப் போல புலிகளின் தலைமையால் நிராகரிக்கப்பட்டு

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா பரப்புரை தீவிரமடைகிறது: இந்தியா விளையாட்டு நடத்துகிறது

## ஆனால் சீனாவோ உறுதியாக நிற்கிறது

ஜெனிவாவில் முக்கியமான ஐநா மனித உரிமைப் பேரவை அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எதிரான மற்றும் சார்பான தீவிர பரப்புரைகள் கடந்த வாரம் இடம் பெற்றன. ஸ்ரீலங்கா பற்றிய அமெரிக்காவின் உத்தேச தீமானத்துக்கு எதிரான ஆதரவைத் திரட்டுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் சிறப்பு தூதர்கள்,உலகத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை சந்திக்கும் பணியில் கடுமையாக ஈடுபட்டிருந்த அதேவேளை, தமிழ் புலம்பெயர் பரப்புரைக் குழுவினர் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கூட அதற்குச் சமமாக தீர்மானத்துக்கு சார்பாக ஆதரவை திரட்டும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

ஐநா மனித உரிமைப் பேரவையில் உள்ள இரண்டு முக்கிய உறுப்பினர்களாகவும் அதேவேளை ஸ்ரீலங்காவின் மிகப் பெரிய முதலீட்டாளர்களாகவும் உள்ள இந்தியா மற்றும் சீனா என்பன கடந்த வாரம் மனித உரிமைகள் விவகாரம் பற்றிய தங்கள் குரல்களையும் ஒருவருக்கொருவர் சளைககாமல் எழுப்பியிருந்தார்கள்.

இதற்கிடையில் ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையில் வெளியார்கள் தலையிடுவதை தான் எதிர்ப்பதாக சீனா உறுதிப்படத் தெரிவித்திருந்தது, ஸ்ரீலங்கா



லீ ஸ்கொட்

மீதான ஒரு சர்வதேச விசாரணையை அது எதிர்க்கக்கூடும் என்பதற்கு ஒரு அடையாளமாக இருக்கலாம்; அதேவேளை இந்திய அரசாங்கம் அதுபற்றி மேலும் கருத்து தெரிவிப்பதற்கு முன்னர், உத்தேச தீர்மானத்தின் இறுதி எழுத்து வடிவத்தை தான் முதலில் பார்க்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் விசேட தூதுவராக சீனாவுக்கு விஜயம் செய்தபோது.சீன வெளியுறவு அமைச்சரையும் மற்றும் சீன உதவிப் பிரதமரையும் சந்தித்திருந்தார்.

"ஸ்ரீலங்காவின் உள் விவகாரங் களில்,மனித உரிமைகள் பிரச்சினை என்கிற சாக்கில் சில நாடுகள் தலையிடுவதை சீனா எதிர்க்கிறது" என பீஜிங்கில் நடந்த சந்திப்பின் பின் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, பீரிசிடம் தெரிவி த்ததாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம், ஸ்ரீலங்காவிலிருந்து வருகை தந்திருந்த ஒரு ஊடகவியலாளர் குழு புது தில்லியில் வைத்து, வரப்போகும் ஐநா மனித உரிமைப் பேரவை அமர்வுகளைப்பற்றியும் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் பற்றியும் இந்தியா என்ன நினைக்கிறது என்று இது பற்றிக் கேட்ட கேள்வியொன்றுக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. எனினும் ஸ்ரீலங்காவுக்கு அறிவுரை சொல்லும் வகையில் சில வார்த்தைகளைச் சொல்லியிருந்தார். அந்த அறிவுரை, சர்வதேச சமூகத்துடன் ஸ்ரீலங்கா ஈடுபாடு ஏற்படுத்த வேண்டுமே தவிர விரோத போக்கை காட்டக்கூடாது என்பதாக இருந்தது.

"இந்த விடயத்தில் மக்களிடமோ அல்லது நாடுகளிடமோ விரோதப் போக்கைத் தவிர்த்து, சாதகமான வழிகளைப் பார்க்கும் படி அவர்களை(ஸ்ரீலங்கா அரசாங்கம்) நான் வலியுறுத்துகிறேன்" என்று கடந்த வாரம் ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பில் அவர் தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்கா அப்படியான ஒரு வேண்டுகோளை விடுக்கும் பட்சத்தில் இந்தியா அதனுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளது, மற்றும் இப்போது விடயங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதை பற்றி அமைச்சர் பீரிசிடம் இருந்து வரவிருக்கும் பதிலுக்காக காத்தி ருப்பதாகவும் அவர் மேலும் தெரிவி த்தார்.இந்திய வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் கூறுகையில் ஜெனிவாவில் உள்ள அனைத்துக் கட்சிகளுடனும் இந்தியா தொடர்பிலுள்ளது, மற்றும் அந்தப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து வருகிறது என்றார்.

"எங்கள் கண்காணிப்பு கருவியின் கீழுள்ள ஒரு விடயம் அது. அது எப்படிச் செல்கிறது என்பதை நாங்கள் அவதானிப்போம்" என்று சொன்ன அவர் இந்திய அரசாங்கம் அதன் நிலையை முடிவு செய்வதற்கு முன்னர் உத்தேச தீர்மானத்தின் இறுதி எழுத்து வடிவத்தை பார்க்க வேண்டியுள்ளது என்பதையும் சேர்த்துச் சொன்னார்.

வெளியுறவுச் செயலர் மேலும் வலியுறுத்தியது, ஸ்ரீலங்கா பற்றி இந்தியாவுக்கு சொந்தமாக சில கருத்துக்கள் உள்ளன, தமிழர்கள் பிரச்சினை உட்பட அந்தக் கருத்துக்களை ஸ்ரீலங்காவிடம் தெரிவிப்போம் என்று.

"அந்த தீர்மானத்தின் வார்த்தை வடிவம் வெளியானதும் நாங்கள் அதைப்பற்றி தீர்மானிப்போம். அதைப்பற்றி தற்சமயம் இந்தியாவின் நிலைப்பாடு எதுவுமில்லை" என்று அவர் ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளர் குழுவிடம் தெரிவித்தார். ஆயினும் அப்படிச் சொல்லியிருந்தாலும், வரும் மே மாதம் இந்தியா பொதுத் தேர்தலுக்கு தயாராகிறது மற்றும் எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி ஆளும் காங்கிரசை விட முன்னிலை பெறுவதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்துகிறது, இதனால் ஆளும் காங்கிரஸ் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய தமிழ் கட்சிகளின் ஆதரவை தேட நினைக்கிறது. அந்த ஆதரவை தமிழ் நாடு வழங்க வேண்டுமாயின் ஸ்ரீலங்கா மீதான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா பின்துணை வழங்க வேண்டும்.

இதற்கிடையில் தமிழ் புலம்பெயர் பரப்புரையாளர்கள் குழு, லண்டன் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற இடங்களில் கூட்டத்தை நடத்தியதுடன் ஸ்ரீலங்கா மீதான சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவித்து அவுஸ்திரேலிய செனட் நிறைவேற்றியுள்ள தீர்மானம் அவர்கள் பெற்றுள்ள தார்மீக ஆதரவின் வெற்றியினை உயர்த்திக்காட்டும் ஒன்றென என எண்ணுகிறார்கள். மேலும் ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு சபையில் உள்ள 47 நாடுகளின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்களின் அதரவு கிடைப்பது உறுதி என்று பிரித்தானியா கூறுகிறது.

பிரித்தானியாவில் உள்ள செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் புலம்பெயர் பரப்புரையாளர்கள் குழுவான உலகத் தமிழர் பேரவை (ஜி.ரி.எப்), அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ்(ஏ.ரி.சி), அவுஸ்திரேலியாவில்



மக்டொனா

உள்ள தொழிற் கட்சி மற்றும் பச்சைக் கட்சி அங்கத்தவர்கள் இடையே மேற்கொண்ட தீவிர பரப்புரையின் விளைவாகவே செனட்டில் இந்த தீர்மானம் நிறைவேறியதாகத் தெரிவித்தது, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவையின் ஒரு அங்கமாகும்.

தமிழ் புலம்பெயர் பரப்புரையாளர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திடம்(ஈ.யு) இருந்தும்

**ஈஸ்வரன் ரட்னம்**

சாதகமான மற்றொரு சமிக்ஞையும் கிடைத்துள்ளது, ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரச் சபை ஐநா மனித உரிமைப் பேரவையில் அந்தப் பிரேரணையை ஆதரிக்க முடிவெடுக்கிறது "அது உள் நாட்டுப் போரின்போது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் மோசமான குற்றங்கள் அதேபோல நாட்டில் தற்போது நிலவும் மனித உரிமை நிலவரங்கள், என்பனவற்றைப்பற்றிய நம்பிக்கையான மற்றும் சுதந்திரமான விசாரணை உட்பட, ஸ்ரீலங்காவில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை விரிவுபடுத்தும் முயற்சிகளுக்கு தீவிர ஆதரவை வழங்கும்".

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சபை,மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐநா மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது வரக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க பிரஸ்ஸல்ஸில் கூடிய கூடடத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள பிரித்தானிய அரசாங்கம் அந்த தீர்மானம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் நம்பிக்கையுடன் இருப்பதற்கான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழர்களுக்கான அனைத்து கட்சி பாராளுமன்றக் குழுவை(ஏ.பி.பி.ஜி.ரி) பிரதிநிதிப்படுத்தும் ஐக்கிய இராச்சிய பாராளுமன்ற உறுப்பினாகளான லீ ஸ்கொட் மற்றும் சியொபின் மக்டொனா ஆகியோர்,கடந்த வாரம் பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் கூடினார்கள், அந்தக் கூட்டத்தில் மார்ச்சில் நடக்கவுள்ள ஐநா மனித உரிமைப் பேரவையின் 25வது அமர்வில் சமர்பிக்கப்படவுள்ள உத்தேச தீர்மானத்தின் இறுதியான நகலை பெறுவது தொடர்பாக மூத்த வெளியுறவு மற்றும் பொதுநலவாய (எப்.சி.யு) பிரதிநிதிகள் உரையாற்றினார்கள்.

அந்தக் கூட்டத்தில் மேலும் ஸ்ரீலங்கா தீவில் ஒரு சுயாதினமான சர்வதேச விசாரணையை அமைப்பதற்காக அதன் சர்வதேச பங்காளர்களுடன் பிரித்தானிய அரசாங்கம் இணைந்து பணியாற்றுவது உறுதி செய்யப்பட்டது. தீர்மானத்தின் உள்ளடக்கம் அதன் பரிந்துரைகளை மேலும் தாமதமின்றி நடைமுறைப் படுத்தும் கடுமையான ஆணையை கொண்டிருக்க வேண்டும்,மற்றும் தீவில் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் நீடித்த சமாதானத்தை அடைவதில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் பரிமாறும் வகையில் பாதிக்கபட்டவர்கள் சாட்சியமளிக்கும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில், ஐநா மனித உரிமைப் பேரவையின் 25வது அமர்வில் ஒரு எழுத்து மூலமான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை , மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட ஸ்ரீலங்கா வாசிகளுக்கு சபை நிச்சயம் உதவி செய்யும் என்று தெரிவித்தது. அடுத்த மாதம் ஜெனிவாவில் நடக்கவுள்ள அமர்வுக்கு முன்னரே பகிரங்கப்படுத்தப்பட்ட அந்த அறிக்கையில், 2009ம் ஆண்டு முடிவடைந்த அரசாங்கப் படைகள் மற்றும் எல்.ரீ .ரீ .ஈ ஆகியோருக்கு இடையேயான ஆயுத மோதலின் போது,

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா அமர்வில் இலங்கைக்கு எதிராக 23 நாடுகள் - ஜிரிஎவ்

இலங்கைக்கு எதிராக 23 நாடுகள் வாக்களிக்கும் என க்ளோபல் தமிழ் போராம் என்ற பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் அமைப்பு எதிர்வு கூறியுள்ளது.




எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அமெரிக்கா பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற உள்ளன.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 23 நாடுகள் வாக்களிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரி;மைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையின் அறிக்கையின் அடிப்படையில் அமெரி;க்கா தீர்மானம் முன்வைக்கும் என சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தியாவும் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என எதிர்வு கூறியுள்ளது,

இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு பல நாடுகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதாகவும், இலங்கைக்கு எதிரான பிரச்சாரங்கள் வலுப்பெற்று வருவதாகவும் க்ளோபல் தமிழ் போராம் அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

செக்குடியரசு, எஸ்டோனியா, மொன்டஜெனரோ, ஒஸ்ட்ரியா, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, பிரித்தானியா, வட அயர்லாந்து, அமெரிக்கா, கொரியா, இந்தியா, ஆர்ஜன்டீனா, பிரேஸில், பேரு, அன்டிகுவா, ச்சிலி, கொஸ்டரிக்கா, சியரே லியோன், கோட் டிவோரி, பெனின், மெக்ஸிக்கோ, மெஸிடோனியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என தெரிவித்துள்ளார்.

இன்னும் சில நாடுகள் வாக்களிப்பில் பங்களிக்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரஸ்யா, சவூதி அரேபியா, வியட்நாம், குவைட், மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, சீனா, கொங்கோ, கியூபா மற்றும் வெனிவலா ஆகிய 13 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என எதிர்வு கூறியுள்ளார்.

## பான்கிமூன் - டலஸ் சந்திப்பு

இலங்கையின் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெருமவிற்கும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலானர் பான் கீ மூனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்தில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய முனைப்புக்களில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் விவகாரம் தொடர்பில் சர்வதேச நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச சவால்களில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு ஆகியன பற்றியும் பேசப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலம்பெயர் அமைப்புக்கள் போலிப் பிரச்சாரங்கள் செய்கின்றன

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்புக்களின் தகவல்களின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சில புலம்பெயர் அமைப்புக்கள் போலிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட மாட்டாது என எதிர்பார்ப்பதாகத் தெரிவிததுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு சில நாடுகளின் அரசியல் விளையாட்டு மைதானம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதி கட்ட யுத்தத்தின் போது 40000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகவும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் வடக்கு இருந்த காலத்தில் ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததாகவும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய கட்டளைஅதிகாரி இலங்கை விஜயம்!

இந்திய இராணுவத்தின் தென்பிராந்திய கட்டளை அதிகாரி லெப்.ஜெனரல் அசோக் சிங், சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

மூன்றுபேர் கொண்ட குழுவுடன், கடந்த வாரம் கொழும்பு வந்த அவர், சிறிலங்கா இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, சிறிலங்கா இராணுவத்தின் தற்போதைய பங்களிப்பு மற்றும், தியத்தலாவவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ கட்டளைப் பயிற்சி நிலையத்தின் பயிற்சி பாடநெறி குறித்து, சிறிலங்கா இராணுவத் தளபதியின் செயலரால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின் போது, இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

சிறிலங்கா விமானப்படைத் தலைமை அதிகாரி, கூட்டுப்படைகளின் தளபதி ஆகியோரையும், லெப்.ஜெனரல் அசோக் சிங் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதையடுத்து. யாழ்ப்பாணம் சென்றிருந்த லெப்.ஜெனரல் அசோக் சிங், 1987ம் ஆண்டு



யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட போது, விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பலியான இந்தியப்படையினர் நினைவாக பலாலியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் னபிக்கும் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பின்னர் அவர் பலாலிப் படைத் தலைமையகத்தில் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலும், வழிபாடுகளையும் மேற்கொண்டுள்ளார்.

# அமரர் அமிர்தலிங்கத்தின் மகன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மகனான அமிர்தலிங்கம் பகீதரன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினார்.



கொளரமான பயங்கரவாத்தை தோற்கடித்ததன் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை பாராட்டிய பகீர்தரன் இனம், மதம் மற்றும் மாகாண பேதமின்றி நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுப்பதனையிட்டு ஜனாதிபதிக்கு அவர் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் கீத்தாஞ்சன குணவர்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக் குறியாகியுள்ள விடுதலை!!

ராஜிவ் காந்தி கொலைக் குற்றத்தில் தண்டனை வழங்கப்பட்டவரகள் விவகாரம் உலக அளவில் தலைப்புச் செய்தியாகியிருக்கின்றது. பாரதப் பிரதமராக இருந்து, ஒரு தேர்தலைச் சந்தித்திருந்தபோது, வேட்பாளராக மக்கள் முன்னால் சென்றிருந்த வேளை, தமிழ் நாட்டில் வைத்து ராஜிவ் காந்தி மிகவும் துணிகரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார். இது ஓர் அரசியல் கொலை. பிராந்திய வல்லரசாகிய இந்தியப் பெருநாட்டின் முக்கிய தலைவராகக் கருதப்பட்ட இவருடைய கொலை, பிராந்திய சர்வதேச அரசியல் கொலையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

இரண்டு தசாப்தத்துக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளும் நீதிமன்ற விசாரணைகளும் நடைபெற்றிருந்தன. இந்தக் கொலைச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கு இந்திய நீதிமன்றத்தினால் ஙக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கருணை மனு நடவடிக்கையின் மூலம் இந்த வழகக்றன் எதிரிகள் 7 பேரில் மூன்று பேரின் விவகாரம் இன்று இந்திய அரசியலில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்திய ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கருணை மனு தொடர்பில் வெளிப்படையான முடிவு ஒன்றை அறிவிக்கத் தவறியதன் விளைவை இப்போது இந்திய மத்திய அரசாங்கம் சிக்கலான ஒரு விடயமாக எதிர்கொண்டிருப்பதையே காண முடிகின்றது.

தண்டனை வழங்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதிக்குச் செய்யப்பட்ட கருணை மனுவின் மூலம், இந்த விவகாரம், நீதிமன்ற விசாரணைகளில் இருந்து அரசியல் அரங்கில் பிரவேசித்திருந்தது. ஆயினும் அரசியலரங்கில் நிலவிய அசாதாரணமான மௌன நிலையையடுத்து, அது மீண்டும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு வரப்பட்டிருந்தது. இந்த விடயத்தைப் பரிசீலனை செய்த நீதிமன்றம் ஏற்கனவே வழங்கியிருந்த மரண தண்டனையை ஆயுட்காலச் சிறைத் தண்டனையாக மாற்றியது. ஆயினும் கருணை மனு தொடர்பில் காட்டப்பட வேண்டிய கருணையை மேலும் வெளிப்படுத்தும் வகையில் போலும், தமிழக அரசு விரும்பினால் தண்டனை வழங்கப்பட்டவர்களை விடுதலை செய்யலாம் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் பரிந்துரைத்திருந்தது.

மரண தண்டனையை ஆயுட்காலச் சிறைத் தண்டனையாக மாற்றிய நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்வது தொடர்பில், இவ்வாறு தமிழக அரசை தொடர்புப்படுத்தியதன் மூலம், நீதித்துறையில் இருந்து அரசியல் அரங்கிற்கு இந்தப் பந்து வீசப்பட்டிருந்தது. தனது அரங்கில் வந்து விழுந்த பந்தை பலரும் எதிர்பார்த்திருந்த வகையில் கையாண்டிருந்தார். தூக்குத் தண்டனையில் இருந்து ஆயுட்காலச் சிறைத் தண்டனைக்கு தண்டனை குறைக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு சபையில் முடிவு செய்து, அது தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு 3 நாட்கள் அவகாசம் வழங்கியிருந்தார்.

ஆயினும் ஙக்குத் தண்டனை குறைப்பு என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பு மீதான மீள்சீராய்வு மனுவை மத்திய அரசு தாக்கல் செய்திருப்பதனால், அந்த மனு தொடர்பில் முடிவெடுக்கப்படும் வரையில் குற்றவாளிகளை விடுதலை செய்ய முடியாது என்று மத்திய அரசாங்கம் தமிழக அரசின் முடிவை எதிர்த்து, அவசர அவசரமாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. அத்துடன், தமிழக அரசின் முடிவுக்கு இடைக்காலத் தடையுத்தரவையும் இதன் மூலம் பெற்றுவிட்டது. இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ள இந்திய நீதிமன்றம் இது தொடர்பில் விளக்கமளிப்பதற்குத் தமிழக அரசுக்கு இரண்டு வாரம் கால அவகாசமும் வழங்கியிருக்கின்றது.




தண்டனைக் குறைப்பு தீர்ப்பில் நீதிமன்றம் செய்திருந்த பரிந்துரைக்கு அமைய ராஜிவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் இருந்த போதிலும், தண்டனைக் குறைப்பு செய்து சலுகை காட்டுகின்ற விடயத்தில் அது சரியான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டது என்று தமிழக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

குற்றவாளிகளை விடுதலை செய்வதற்குத் தமிழக அரசுக்கு அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமே உள்ளது. இல்லையில்லை. இந்த விடயத்தில் மத்திய அரசின் கருத்தைப் பெற்றால் போதும். மத்திய அரசின் ஒப்புதல் இதற்கு அவசியமில்லை என்ற வாதங்களும், பிரதி வாதங்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் சிறையில் இருந்து உடனடியாக விடுதலை பெற்றுவிடுவார்கள் என்று பலரும் மகிழ்வோடு எதிர்பார்த்திருந்த ஏழு தண்டனைக் கைதிகளும் சிறைக்கதவுகளைக் கடந்து வர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. தூக்குத் தண்டனையில் இருந்து தப்பி, ஆயுட் கைதிகளாகி பின்னர் முழுமையான விடுதலையை இந்த ஏழு பேரும் பெறுவார்கள் என்பதில் பல தரப்பினரும் கொண்டிருந்த மகிழ்ச்சி வெய்யிலில் சிக்கிய புழுவாகிப் போயிருக்கின்றது.

**அரசியல் விளையாட்டு**

இந்தியப் பிரதமராக இருந்த ராஜிவ் காந்தியின் கொலையானது, இந்திய மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும், ஆத்திர உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. அரசியல்வாதிகள் இதனால் கொதித்துப் போயிருந்தார்கள். இதன் காரணமாக இலங்கையில் இடம்பெற்று வந்த அடக்குமுறைகள், இப்போது கூறப்படுவது போன்ற இன ஒடுக்குமுறை, இன அழிப்பு நடவடிக்கைகளை அறிந்து, தமிழ் மக்களுக்கு ஆதரவாக எழுச்சி பெற்றிருந்த அனுதாப அலை ஓய்ந்து போனது. அது விடுதலைப்புலிகள் மீதான ஆறாத சீற்றமாகியது. பாதிப்புகளுக்கு ஆளாகியிருந்த ஈழத் தமிழ் மக்கள் மீது இந்திய மக்கள் குறிப்பாகத் தமிழக மக்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும்கூட, வெறுப்பாக மாறியிருந்தது. இருப்பினும், தங்கள் நாட்டு அரசியல் தலைவர் ஒருவரைப் படுகொலை செய்துவிட்டார்களே என்ற தமிழக மக்களின் அந்த வெறுப்பும் கோபமும் நாளடைவில் மாற்றம் பெற்றிருந்தது. ஆனால் இந்தியத் தலைநகர அரசியல்வாதிகள் மத்தியில் இந்த மாற்றம் ஏற்படவில்லை.

இருந்தபோதிலும், ராஜிவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான மனிதாபிமான அனுதாப உணர்வானது ஓர் அரசியல் மயப்பட்டதாக ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதையே காண முடிகின்றது. 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது, இந்திய மத்திய அரசும் சரி, தமிழக அரசும்சரி தங்களைக் காப்பாற்றுவதற்காக ஏதாவது செய்வார்கள் என்று முள்ளிவாய்க்காலின் மரணக் கூட்டுக்குள் சிக்கி நாளாந்தம் உயிரழந்து. படுகாயமடைந்து கொண்டிருந்த தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தார்கள். அப்போது ஏற்பட்டிருக்க வேண்டிய மனிதாபிமான உணர்வும், அனுதாபமும் இந்தியத் தரப்பிலிருந்து வரவே இல்லை.

**- செல்வரட்னம் சிறிதரன்**

மாரிகாலத்து அடைமழைபேல அன்றாடம் இடைவெளியே இல்லாமல் பொழிந்து கொண்டிருந்த எறிகணை தாக்குதல்கள், விமானக்குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் என்பவற்றின் மத்தியில் இருந்து உயிர்ப்பிச்சைக்காக எழுந்திருந்த பாதிக்கப்பட்ட மக்களின் அவலக்குரல்கள் எவருடைய மனங்களையும் இளகச் செய்யவில்லை. அவலப்பட்ட மக்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவரையும் இந்தியத் தரப்பில் எவரையும் தூண்டவுமில்லை. அந்தக் காலப்பகுதியில் ஐநாவின் முக்கிய பிரதிநிதியாக இந்தியாவைச் சேர்ந்த விஜய் நம்பியார் இலங்கை வந்திருந்த போதிலும் எதுவும் நடக்கவில்லை.

போர்ச்சூழலில் சிக்கியிருந்த மக்களைக் காப்பாற்றுவதற்காக மேரிகொல்வின் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையாளர் விஜய் நம்பியாருடன் தொடர்பு கொண்டு நிலைமைகள் எவ்வளவு மோசமடைந்திருக்கின்றது என்பதை எடுத்துக் கூறி, போர்க்களத்தில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்தியிருந்தார். ஐநாவும்கூட, அந்த நேரத்தின் கொடூரமான நிலைமைகள் குறித்து நன்கு அறிந்தே இருந்தது. எனினும், யுத்த மோதல்களில் சிக்கித் தவித்த அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அப்போது கனிமொழி உட்பட தமிழகத்தின் முக்கியத் தலைவர்களை முள்ளிவாய்க்காலில் இருந்து பலரும் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு தங்கள் உயிரிகளைப்பாற்றுமாறு அபயக்குரல் எழுப்பினார்கள். அந்தக் குரல்கள் காற்றில் கரைந்து போயின. நிலைமையின் தீவிரத்தைக் குறைப்பதற்கும், அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. இதே தமிழகத்தில் இருந்து ராஜிவ் காந்தி கொலைச் சம்பவத்தில் தண்டனை வழங்கப்பட்டவர்கள் மீது அனுதாபம் காட்டப்படுகின்றது. இது உண்மையான மனிதாபிமானம்தானா, உண்மையான அனுதாபம் தானா என்ற சந்தேகக் கேள்வி தவிர்க்க முடியாத நிலையில் எழுந்து நிற்கின்றது. இலங்கையில் யுததம் முடிவடைந்து ஐந்து வருடங்களாகப் போகின்றது. ஆயினும் இனப்பிரச்சினைக்கு இன்னும் அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பற்றி எந்தவிதமான அக்கறையும் அரசாங்கத்தினால் செலுத்தப்படவில்லை. இறுதி யுதத்தின்போது கொல்லப்பட்ட மக்களுக்கும், காணாமல் போயுள்ளவர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும். அங்கு இடம்பெற்ற மனிதாபிமான சட்ட மீறல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என்ற குரல்கள் சர்வதேச ரீதியில் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு இந்திய அரசும், ஆதரவு காட்ட வேண்டும் என்று பரவலான எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

**தேர்தலுக்கான காய் நகர்த்தல்**

இந்த விடயம் தமிழக மக்கள் மத்தியிலும் இப்போது செல்வாக்கு பெற்றிருக்கின்றது. இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு நியாயம் வேண்டும். காணமல் போயுள்ளவர்கள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்பு கூற வேண்டும்

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி.........(9ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது உள்ளிட்ட பல விடயங்களில் அவர்கள் ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள். அதனையொட்டி, ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற அனுதாப அலையும் அந்த மக்கள் மத்தியில் பெரிய அளவில் காணப்படு கின்றது. இது முக்கியத்துவம் மிக்கதோர் அரசியல் விடயமாகத் தமிழகத்தில் இப்போது முனைப்பு பெற்றிருக்கின்றது.

இந்த முனைப்பை அரசியல் மூலதனமாகக் கொண்டு தமிழக மக்களின் ஆதரவை வரவிருக்கின்ற தேர்தலில் பெற்றுவிட வேண்டும் என்ற அரசியல் ஆர்வமும், அவசரத் துடிப்பும் தமிழக முதல்வருடைய நடவடிக்கைகளில் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றார்கள். இதற்காகவே, ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களுக்குத் தண்டனை குறைப்பு செய்யும் விடயத்தைக் கையில் எடுத்து தீவிரமாக அவர் செயற்பட்டிருந்தார் என்று அவர்கள் கூட்டிக்காட்டுகின்றார்கள். தமிழக முதல்வரைப் பொறுத்தமட்டில், வரவிருக்கின்ற தேர்தலின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கையும், திமுக தலைவர் மு.கருணாநிதியின் அரசியல் செல்வாக்கைத் னள் பறக்கச் செய்ய வேண்டும் என்பதற்கான ஓர் ஆயுதமாகவே, இவரால் ராஜிவ் காந்தியின் கொலைக்குற்றவாளிகளின் தண்டனைக்குறைப்பு விடயம் கையாளப்படுகின்றது என்பது அவர்களின் கணிப்பாக இருக்கின்றது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் உட்பட 7 பேர் தொடர்பான விடயங்கள் தமிழக மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றன. அவர்கள் மீதான தண்டனை குறைக்கப்பட வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற உணர்வு கிட்டத்தட்ட ஓர் அலையாகவே எழுந்திருந்தது. இந்தப் பின்னணியில் அவர்களுடைய னக்குத் தண்டனையை ஆயுள் சிறைத்தண்டனையாகக் குறைத்த நீதிமன்றம் அவர்களை தமிழக அரசு விரும்பினால் விடுதலை செய்யலாம் என்று சிபாரிசு செய்திருந்தது.

நீதிமன்றத்தின் இந்த சிபாரிசானது, இந்தத் தேர்தல் வழலில் தமிழக மக்களின் ஆதரவைப் பெறுகின்ற விடயத்தில் தமிழக முதல்வருக்கு பழம் நழுவி பாலில் விழுந்ததைப் போன்ற ஓர் அரசியல் சந்தர்ப்பத்தையே வழங்கியிருந்தது. அதன் காரணமாகவே இவர்களை விடுதலை செய்வது தொடர்பில் உடனடியாக முடிவெடுத்து, அது தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா மூன்று நாள் அவகாசத்தை வழங்கியிருந்தார்.

தமிழக மக்களின் கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ள ராஜிவ் கொலைவழக்கில் தண்டனை பெற்றவர்கள் விடயத்தை தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுகின்ற வகையில் சாதுரியமாகக் கையாண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக அதிமுகவே செயற்பட்டது என்ற படத்தைக் காட்டுவதுடன், காங்கிரஸ்காரர்கள் அதனை முழுமையாக எதிர்க்கின்றார்கள் என்றதோர் அரசியல் தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கான காய் நகர்த்தல்களை அவர் கையாண்டிருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்கள் தொடர்பில் முதலமைச்சர் ஜெயலலிதா தீவிரமாகச் செயற்படுகின்றார். ஆனால் இதிலும்பார்க்க முக்கியமான சந்தர்ப்பங்களில் தீவிரமாகவும், அவசரமாகவும் செயற்பட்டிருக்க வேண்டிய முதலமைச்சராக இருந்த மு.கருணாநிதி அவ்வாறு செயற்படவில்லை என்று ஏற்கனவே பலரும் இப்போது பேசத் தொடங்கிவிட்டார்கள். மக்களின் இத்தகைய எண்ணவோட்டத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முதலமைச்சர் தயங்கமாட்டார் என்று பலரும் கருதுகின்றார்கள். அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமான வழல் ஒன்று கிடைக்குமானால் அதனை சரியான முறையில்ப யனப்டுத்தத் தயங்கமாட்டார்கள் என்பது தெரிந்ததே.

### விடுதலையின் பயன்

ராஜிவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளின் தண்டனைக் குறைப்பும், அதனைத் தொடர்ந்து அவர்களை விடுதலை செய்வதற்கான வழலும் ஏற்பட்டிருக்கின்ற போதிலும், அவர்கள் உண்மையாகவே விடுதலையாவார்களா, அவ்வாறு அவர்களை விடுதலை செய்ய முடியுமா என்பது இப்போது கேள்விக்குறியாகியிருக்கின்றது.

அவர்களை விடுதலை செய்வது தொடர்பில் தமிழக அரசு எடுத்துள்ள முடிவை எதிர்த்துள்ள இந்திய மத்திய அரசாங்கம், அதற்கு இடைக்காலத் தடையொன்றையும் நீதிமன்றத்திடமிருந்து பெற்றிருக்கின்றது. இதனால் இந்த விடயத்தில் இப்போது பல்வேறுபட்ட சட்டச் சிக்கல்கள் எழுவதற்கான வழல் ஏற்பட்டிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தின் அதிகார பலம், மாநில அரசிற்குள்ள செயற்பாட்டு அதிகாரம் என்பன குறித்து பல்வேறு சட்டவாதங்கள் எற்கனவே எழுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் உடனடியாக முடிவு காணப்பட்டு, இந்த விடுதலை விவகாரம் முடிவுக்கு வருமா என்பதை அனுமானிக்க முடியாமல் இருக்கின்றது.

அவ்வாறே, ஒரு தீர்க்கமான முடிவொன்று மேற்கொள்ளப்பட்டாலும், இந்தத் தண்டனைக் கைதிகள் விடுதலை பெற்று சிறைச்சாலையை விட்டு வெளியில் செல்ல முடியுமா என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இவர்கள் மீது நம்பிக்கை வைத்து இலங்கை அரசாங்கம், இவர்களை நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கமாட்டாது என்று நிச்சயமாக நம்பலாம். இதனை கோடி காட்டும் வகையில் அமைச்சரவைப் பேச்சாளராகிய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவர்களை ஏற்பதென்பது குழப்பகரமான ஒரு விடயமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன், 20 வருடங்களுக்கு மேலாக நாட்டில் இல்லாதிருந்தவர்கள் தொடர்பில் குடியுரிமைப் பிரச்சினை ஏற்படலாம் என கூறியுள்ள அவர் இது சட்டராதியாகக் கையாளப்பட வேண்டிய விடயம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் இது விடத்தில் தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்குத் தனக்குத் தகுதி இருக்கின்றதா என்ற சந்தேகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசானது, தேசிய பாதுகாப்பிலும், விடுதலைப்புலிகள் தொடர்பிலும் அதீத அக்கறையும் செயற்பாட்டுத் தன்மையையும் கொண்டுள்ளது. விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுத்து விடுவார்கள் என்ற என்ற அசசத்தை மிகத் தீவிரமாக எல்லா விடயங்களிலும் அது கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலிகள் என்றாலும்சரி, அவர்களுடன் தொடர்புடையவர்கள் என்றாலும்சரி, யுத்தம் முடிவடைந்து நான்கு வருட்களாகின்ற இன்றைய நிலையிலும் அதிக அளவில் சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்ற போக்கை அதுகொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு நிலையில் மிகவும் தேர்ச்சியான முறையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு ஏற்றுக்கொள்ளும் என்று

(11ம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா.......(7ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கான குற்றங்கள் பற்றிய ஒரு நம்பிககையான சர்வதேச விசாரணையை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது முயற்சிகள் மற்றும் வளங்களை பயன்படுத்தி தடை செய்வதிலேயே குறியாக உள்ளதால், மனித உரிமை மீறல்களால் பாதிப்படைந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நீதி, உண்மை மற்றும் இழப்பீடு என்பன மறுக்கப்பட்டுள்ளன, என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆயுத மோதலின்போது ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் மற்றும் எல்.ரீ .ரீ .ஈ என்பன சர்வதேச விதிகளை மீறியுள்ளதுக்கான நம்பிக்கையான குற்றச்சாட்டுகள் நீண்ட காலமாகவே உள்ளன,சில தொகையான யுத்தக் குற்றச் சாட்டுகள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றச் சாட்டுகள் பதில் சொல்லப்படாமலேயே உள்ளன, என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளது, ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் புரிந்த கட்டாயமாக காணாமற் போக்கடித்தல், நீதிக்குப் புறம்பான கொலைகள், பாதுகாப்புக்கு உரிய இடங்களான,மருத்துவ மனை போன்ற இடங்களில் தங்கியிருந்த பொதுமக்கள்மீது வேண்டுமென்றே குண்டு தாக்குதல் நடத்தியது,போரில் சிக்குண்டிருந்த மக்களுக்கு உணவு மருந்து என்பனவற்றை கிடைக்காமல் தடை செய்தது போன்றவற்றுக்கான கணிசமான ஆதாரங்கள் உள்ளன என்று. பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது, யுத்த வலயத்தை விட்டு தப்பியோட முயற்சித்தவர்களைக் கொலை செய்தது, மற்றும் சிறுவர் பேராளிகளை ஆட்சேர்ப்பு செய்தது, போன்ற குற்றங் களைச் செய்ததாக எல்.ரீ .ரீ.ஈ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கம் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிராக தனது படைகள் மற்றும் தற்பொழுது அதிகாரம் மிக்க பதவிகளை வகித்து வரும்,அதற்கு பொறுப்பானவர்களாக குற்றம் சாட்டப்படும் மூத்த அதிகாரிகள் உட்பட, அனைவரும் புரிந்துள்ளதாகக் கூறப்படும் நம்பிக்கையான குற்றச் சாட்டுகளை தொடர்ந்து மறுத்து வருவதுடன், சுயாதீனமான சர்வதேச விசாரணைக்காக விடுக்கப்படும் அழைப்புகளையும் நிராகரித்து வருகிறது.

அங்கு மேலும் நடப்பவைகளில் குறிப்பிடத்தக்கது, விசேடமாக பொறுப்புக் கூறல் பற்றி குரலெழுப்பும் சமூக ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கம் அச்சுறுத்தல் விடுத்து,கைது செய்து தாக்குதல் நடத்துகிறது,மத ரீதியாக சிறுபான்மையாக உள்ளவர்களையும் மற்றும் அவர்களின் வணக்கத் தலங்களையும் அரசாங்கத்துடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் பௌத்த தேசியவாத ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து இலக்குவைத்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

சர்வதேச மன்னிப்புச்சபை, ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளான ஆயுதக் குழுக்கள், அதேபோல எல்.ரீ.ரீ.ஈ ஆகியோர் சர்வதேச சட்டங்களின் கீழ் புரிந்துள்ளதாகக் கூறப்படும் குற்றங்களுக்காக ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணையை உறுதிப்படுத்தும்படி ஐநா மனித உரிமைப் பேரவையை வலியுறுத்தி உள்ளது. மனித உரிமைக் குழுக்கள் மேலும் தெரிவிப்பது, அந்த விசாரணையில் போதுமானளவு ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியங்கள் இருக்குமாயின், சர்வதேச சமூகம் அத்தகைய குற்றம் புரிந்ததாக சந்தேகிக்கப் படுபவர்கள் மீது உண்மையான நடவடிக்கை எடுத்து சர்வதேச தரங்களுக்கு முழுவதுமாக ஏற்ப நியாயமான விசாரணை நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளன.

எனினும் ஸ்ரீலங்கா மீது ஒரு சர்வதேச விசாரணை நடத்துவதற்கு இடமே இல்லை என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் வெகு தெளிவாகத் தெரிவித்துள்ளது,இந்தச் செய்தி அடுத்தமாத அமர்வின்போது உயர்மட்ட பிரிவினருடன் பேசுவதற்கு அட்டவணைப்படுத்தப் பட்டுள்ள அமைச்சர் பீரிசினால் அநேகமாக வலியுறுத்தப்படும். எனினும் ஸ்ரீலங்கா கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்து ரைகளை நடைமுறைப்படுத்தும் முயற்சிக ளைப் பூர்த்தி செய்ய இன்னும் கால அவகாசம் கோரும் விதமாக ஒரு ஒருமித்த நீர்த்துப்போன தீர்மானத்தை எட்டு வதற்கும் முயற்சி செய்யலாம் என்பதற்கான அடையாளங்களும் உள்ளன.

அதற்கிடையில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் முக்கியமான ஜெனிவா அமர்வுகளில் ஸ்ரீலங்காவை பிரதிநிதிப் படுத்தும் இறுதி தூதுக் குழுவில் உள்ளவர்களின் பெயர்களை அரசாங்கம் இன்னும் தெரிவு செய்யவில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் விசேட மனித உரிமைகள் னதுவரும், அரசாங்க அமைச்சருமான மகிந்த சமரசிங்க, ஜனாதிபதி தன்னைக் கேட ;டுக் கொண்டால் தான் அந்த அமர்வில் ஸ்ரீலங்காவை பிரதிநிதித்துவப் படுத்த தயார் எனக் கூறியள்ளார். கடந்த காலங்களில் ஜெனிவாவில் நடைபெற்ற முக்கிய அமர்வுகளில் ஸ்ரீலங்கா தூ துக் குழுவுக்கு தலைமை தாங்கியுள்ள சமரசிங்க, அடுத்த மாத அமர்வில் ஸ்ரீலங்காவை பிரதிநி தித்துவ படுத்துவதற்கு இன்னமும் தான் தெரிவு செய்யப்படவில்லை என்று கூறினார். ஜெனிவா தூதுக்குழு கலவையை பற்றி ஜனாதிபதியிடமிருந்து அறிவதற்கு காத்திருப்பதாகவும், அவசியம் ஏற்பட்டால் அதற்கு தலைமை தாங்கவும் தயாராக உள்ளதாக அவர் சொன்னார்.

ஸ்ரீலங்கா அடைந்துள்ள முன்னேற்றங்களுக்கு எதிராக உள்ள சிலநாடுகள், மத்திய கிழக்கில் அவர்கள் மேற்கொண்டதைப்போல ஸ்ரீலங்காவிலும் செய்ய முயற்சித்து வருவதாகச் சொல்லப்படுகிறது என்று கடந்த வாரம் அவர் சொல்லியிருந்தார்.

இறுதிக் கட்டப் போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை ஏற்றுக் கொண்ட அதேவேளை, ஐநா மற்றும் இதர தரப்பினரால் இறந்தவர்களின் எண்ணிக்கை 40,000 எனக் கூறப்படுவதை சமரசிங்கா நிராகரித்தார்.

கடுமையான சண்டை இடம் பெற்ற யுத்த களத்துக்குச் செல்ல அவர்களுக்க வழி இல்லாத போது,அது 40,000 என்று எப்படி அவர்களால் திட்டவட்டமாக கூற முடியும், என அவர் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் ஒருபோதும் இராணுவத்துக்கு துரோகம் செய்யவோ அல்லது யாராவது நாட்டை சீர்குலைக்கவோ இடமளிக்காது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தேனீ மொழிபெயர்ப்பு: எஸ்.குமார்
நன்றி:தேனீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசின் முடிவுக்கு ராகுல் கடும் எதிர்ப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டுப்பட்டு தண்டனை குறைக்கப்பட்டிருந்த 7 தமிழர்களை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளதற்கு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.
ராகுலின் தந்தையான ராஜிவ் கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் னக்கை உச்சநீதிமன்றம் ரத்து செய்தது. அத்துடன் 23ஆண்டுகாலம் சிறையில் கழித்ததால் அவர்களது விடுதலை குறித்து மாநில அரசு முடிவு செய்யலாம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் தமிழக அரசு பேரறிவாளன் மற்றும் ராஜிவ் வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் மொத்தம் 7 பேரையும் விடுதலை செய்ய முடிவு எடுத்தது. இந்த முடிவுக்கு ஒப்புதல் தெரிவிக்க 3 நாள் கெடுவை மத்திய அரசுக்கும் தமிழக அரசு விதித்துள்ளது.
இது குறித்து அமேதியில் செய்தியாளர்களிடம் பேசிய ராஜிவ் மகனும் காங்கிரஸ் துணைத் தலைவருமான ராகுல் காந்தி, நான் னக்கு தண்டனைக்கு எதிரானவன். என் தந்தை இந்த நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்தவர். ஒரு முன்னாள் பிரதமரை கொன்றவர்களே விடுதலையானால் இந்த நாட்டில் சாமானியருக்கு எப்படி நீதி கிடைக்கும்? என்றார்.

---

## கேள்வி......... (10ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்ல முடியாது.
ஆமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டிருப்பதைப் போன்று விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளித்து சமூகத்தில் எற்றுக்கொள்கின்ற நடைமுறைகள் நாட்டில் இருந்தாலும், மிகவும் பாரனரமான ஒரு கொலைச் சம்பவமாகக் கருதப்பட்ட, இப்போதும் கருதப்படுகின்ற ராஜிவ்காந்தி கொலைக்குற்றவாளிகளை ஏற்றுப் புனர்வாழ்வளிக்குமா என்பது சந்தேகமே.
இன்றைய வழலில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குள் வருதென்பது பாதுகாப்பற்றது, அவர்களுடைய உயிருக்கு உத்தரவாதமற்றது என்ற கருத்து பொதுவாக நிலவுகின்றது.
எனவே. இந்தக் கருத்தின் அடிப்படையில் தமிழகத்தில், செங்கல்பட்டு, பூந்தமல்லி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு நிறைந்த சிறப்பு முகாம்களில் அவர்களின் உயிர்ப் பாதுகாப்பு கருதி வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் அமைப்பினருடன் ராஜிவ்காந்தி கொலைக்குற்றவாளிகளும் சேர்க்கப்படுவதற்கான சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படுகின்றது.
எனவே, தண்டனைக்குறைப்பு செய்யப்பட்டுள்ள ராஜிவ்காந்தி கொலை வழக்கில் த்ணடனை பெற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும்கூட, விடுதலை செய்யப்படாதவர்களாக இருப்பதற்கான சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படுகின்றது. இவர்களை விடுதலை செய்வதை எதிர்த்துள்ள மத்திய அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துகின்ற ஒரு போக்கில் இத்தகைய ஒரு முடிவை மேற்கொள்வதற்குத் தமிழக அரசு நிர்ப்பந்திக்கப்படலாம் என்பதையும் மறுக்க முடியாது.
இந்த வகையில் சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளன் உட்பட்ட ஏழு பேரினி; விடுதலை என்பது இன்றைய நிலையில் வெறும் தேர்தல் சளசளப்பு விவகாரமாகவே தோன்றுகின்றது.
நன்றி குளோபல் தமிழ்

---

## அந்தமான் தீவுகளில்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

மியன்மார், பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் குறித்த தீவுகளுக்கு அடிக்கடி ஊடுருவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த பகுதியில் மொத்தமாக 572 தீவுகள் காணப்படுவதாகவும் இதில் 38 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.
தீவுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதகாத் தெரிவிக்கப்படுகிறது.1960 மற்றும் 1970ம் ஆண்டுகளில் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் இலங்கைத் தமிழர்கள் குடியேற்றப்ப ட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.
அடர்ந்த காட்டுப் பகுதிகள் நிறைந்த தீவுகளில் புலிப் போராளிகளுக்கு அடைக்கலம் வழங்குவது சுலபமானது என குறிப்பிடப்படுகிறது.

---

## சுயாதீன ......... (12ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பேச்சுவார்த்தை குறிப்பாக தென் ஆபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றி முக்கிய கவனம் செலுத்தும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.
தென் ஆபிரிக்காவின் அனுபவத்தின் அடிப்படையில் இலங்கை தனக்கு பொருத்தமானதொரு நல்லிணக்க செயன்முறையை ஆக்கக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார்

---

## ஐரோப்பிய...... (1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள தானிய களஞ்சியத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியில் நிர்மாண ிக்கப்பட்டுள்ள இந்த களஞ்சியத்தை நிர்மாணிக்க 44 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.
இந்த களஞ்சியத்தில் 500 மெற்றி தொன் தானியங்களை சேமித்து வைக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

---

## ஜனாதிபதி ......... (1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட இக்குழுவில் பிரியந்த சுரஞ்ஜனா வித்தியாரத்ன, மனோ ராமநாதன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 9.51 பரிந்துரையின் பிரகாரம் மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## நல்லிணக்க ......... (1ம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதம் காரணமாக பல முக்கியமான அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த 30 ஆண்டுகளாக வாழ்வதற்கான உரிமை கூட மக்களுக்கு கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.
நாட்டின் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் மேலும் வலுப்படுத்த வேண்டியதே தற்போதைய பிரதான இலக்காக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.
அமைதியானதும், சுபீட்சமானதுமான இலங்கையை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தினதும் நாட்டு மக்களினதும் தெளிவான நோக்கமாக அமைந்துள்ளது என ஜாலிய விக்ரமசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## புலிகளின் தலை... (6ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பி வந்ததும் பெரும் பின்னடைவாக அமையக் காரணமாக அமைந்தது.

**விடுதலைப் புலிகளின் முக்கிய தூண்களில் ஒருவரான பொட்டம்மானை, இந்திய அரசு சரணடையச் சொல்வதை எந்த விதத்தில் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கருதுகிறீர்கள்?**

ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஆயிரக் கணக்கான இளம் சந்ததியினர் மாவீரர்களாகியும் தங்கள் பெயர்களே வெளி உலகத்திற்கு தெரியாமல் பல கரும்புலிகள் உயிரைக் கொடுத்தும் உள்ளனர். அதே இனத்தின் விடுதலைக்காக அந்த மக்களின் எதிர்காலத்திற்காக பல தடைகள் நீங்கி அதற்காக இன்னாரு பாதை திறப்பதற்காகவும் பொட்டம்மானை இந்தியாவிடம் விசாரணைக்காக ஒப்படைத்திருப்பதில் தவறேதும் இல்லை என நினைக்கிறேன். அதே நேரம் பொட்டம்மானை இந்தியா உடனே தூக்கில் போட முடியாது. எனவே பல பிரபலமான வக்கீல்களை வைத்து வாதாடி யிருக்கலாம். எனவே மீண்டும் மீண்டும் பொட்ட ம்மானை இந்தியாவிடம் விசாரணைக்காக ஒப்படைக் குமாறு வைத்த கோரிக்கை புலிகளின் தலைமையால் நிராகரிக்கப்பட்டிருந்தது இவையும் பேச்சு வார்தைகள் இறுக்கமடைய காரணமாக அமைந்தது.

**புலிகளிற்கு ஆயுத வழங்கலில் முக்கியமாக ஈடுபட்டிருந்த உங்கள் நண்பரான கே.பி.(குமரன் பத்மநாதன்) என்பவர் உண்மையில் கைது செய்யப் பட்டாரா? அல்லது சரணடைந்திருந்தாரா?**

கே.பி எனது நண்பர் என்பதைவிட நாங்கள் ஒரு அமைப்பில் இயங்கினோம் என்பதுதான் சரியானது. அதே நேரம் அவர் கைது செய்யப்பட்டதை செய்திகளில் அறிந்திருந்தேன். பின்னர் அவருடன் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தின் போதும் தான் கைது செய்யப் பட்டதாகவே என்னிடம் கூறியிருந்தார்.

**கே.பி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து ஏன் நீக்கப்பட்டார்?**

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் 2001 ம் ஆண்டு புலிகளின் பெரு வெற்றிக்கு பின்னர் அதற்குள் எழுந்த அதிகார போட்டிகள் காரணமாக புலிகளின் தலைமையோடு அருகாகவும், நெருக்கமாகவும் தலைவரை புகழ்ந்து கொண்டு இருந்தவர்களின் கைகளிற்கு அதிகாரங்கள் கை மாறத் தொடங்கியிருந்தது. இந்தப் புகழ்ச்சியானது பிரபாகரன் என்பவர் தலைவர் என்பதைத் தாண்டி தேசியத் தலைவர் சூரியத்தேவன், முருகன் என்று கட்டவுட்டுகளாகவும் கவிதைகளாகவும் பாடல்களாகவும் வெளிவரத் தொடங்கியியுமிருந்தது. அதே நேரம் போராட்டத்தையும் மக்கள் விடுதலையை மட்டுமே குறிக்கோளாக கொண்டு தலைமைக்கு துதி பாடாமல் தூரமாக இருந்து இயங்கிக் கொண்டிருந்தவர்கள் பலரும் ஓரம் கட்டப்பட்டனர். அதன்போது கே.பியும் ஓரம் கட்டப் பட்டதோடு பரப்புரை. வர்த்தகம் .நிதி.வெளிநாட்டு அரசுகள் அமைப்புக்களுடனான தொர்புகள். ஆயுதபேரம்.வாங்குதல் .வழங்கல் .ஆவணங்களை தயாரித்தல்.மருத்துவம் மற்றும் மருந்து தொழில் நுட்ப உபகரண பிரிவு என பல குழுக்களாக இயங்கிய வெளிநாட்டு பிரிவுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து அதனை அனைத்துலக செயலகத்தின் கீழ் கொண்டு வந்து ஒரு நிறுவனமயமாக்கல் முறை யாக்கி புலிகளின் முதுகெலும்பு என சொல்லக் கூடிய வானளாவிய அதிகாரங்கள் அனைத்தையும்.கஸ்ரோ பொறுப் பெடுத்திருந்தார்.

**கே.பி நீக்கப்பட்டதற்கு சொல்லப்பட்ட காரணம் என்ன?**

சொல்லப்பட்ட ஒரேயொரு காரணம், அதை நான் சப்பைக் காரணம் என்றே சொல்வேன். ஆயுதங்கள் வாங்கியதில் சரியாக கணக்கு காட்டவில்லையென்பது தான். புலிகளின் மாதாந்த வருமானமே எவ்வளவு என்று தலைமைக்கே சரியாக தெரியாத போது கணக்கு சரியில்லையென்று கஸ்ரோ தலைமையிடம் வைத்த குற்றச்சாட்டும் அதனை தலைமை ஏற்றுக் கொண்டதும் நகைச்சுவையானது.

**கே.பி கொம்பனியின் நீக்கம் நடைபெறாமல் போயிருந்தால் விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் முடிவு எப்படி இருந்திருக்கும்?**

கே.பி கொம்பனி புலிகளின் தலைமையால் நீக்கப் படாது போயிருந்தால் புலிகள் நிலங்களை இழந்து பலவீனமடைந்திருந்தாலும், புலிகளிற்கு ஆயுதங்கள் தொடர்ந்தும் கிடைத்தபடியே இருந்திருக்கும்யுத்தம் நீண்டு கொண்டேயிருந்திருக்கும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் புலிகளின் தலைமை கூண்டோடு அழிந்து போகாமல் காப்பாற்றப் பட்டிருக்கும்.

**கே.பியை தொடர்ந்து வெளிநாட்டு நிருவாகப் பொறுப்புக்கு தலைமையேற்ற காஸ்ட்ரோவின் செயற் பாடுகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஒரு நாளின் 24 மணி நேரத்தில், சில நேரங்களில் 20 மணிநேரங்கள் விழித்திருந்து இயங்க வேண்டியதுதான் புலிகளின் வெளிநாட்டு பிரிவு. ஏனென்றால் புலிகளின் வெளிநாட்டு பிரிவுஅவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் ஒரு நாளைக்கு வெறும் அரை மணிநேரம் மட்டுமே எழுந்து உட்காரக் கூடிய கஸ்ரோவிடம் அனைத்துலக செயலக பொறுப்பு போய் சேர்ந்ததும், அவரின் கீழான அனைத்து பொறுப்பக்களும் புதியவர்களிடமும் புலிகள் அமைப்பால் வெளிநாடுகளிற்கு அனுப்பி கல்வி பயின்றவர்களிடமும் ஒப்படைக்கப் பட்டது.
கணணித் தொழில் நுட்ப அறிவும், ஆங்கில அறிவும் இருந்தால் ஆயுதங்களை வாங்கி விடலாமென புதியவர்கள் நினைத்தார்கள். நவீன ஏவுகணைகள் வாங்குவதற்காக புதிய ஆயுத முகவர்களை தேடிப் போனார்கள். ஒரு காலத்தில் போலி மனிதர் என பழைய கட்டமைப்பினர் ஒதுக்கி வைத்திருந்த தமிழகத்தை சேர்ந்த ஒரு பாதிரியாரையும் மீண்டும் தங்களுடன் இணைத்தார்கள். அவரும் பல ஆயுத முகவர்களை புதியவர்களிற்கு அறிமுகப் படுத்தினார். கஸ்ரோ தலைமையிலான புதியவர்கள் ஆயுத முகவர்கள் என நம்பி பேரங்கள் நடத்திய அனைவருமே வெளிநாட்டு உளவமைப்புளின் ஆட்களாக இருந்தனர். அவர்களால் இறுதியில் பணத்தையும் இழந்ததோடு, ஆயுதங்களை கொண்டு போய் சேர்க்க முடியவில்லை. எல்லாவற்றிக்கும் மேலாக புலிகள் தரப்பில் ஆயுத பேரத்தில் ஈடுபட்ட அனைவரும் கைதாகி சிறைகளில் வாடுகிறார்கள்.
தொடரும்...
.நன்றி - அருளினியன் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## கைவிரல் அடையாள இயந்திரம் அறிமுகம்

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் காண்பதற்காக தானியங்கி கைவிரல் அடையாள இயந்திரம் அறிமுகப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தானியங்கி கைவிரல் அடையாள முறைமை இந்த வாரத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸ் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.கைவிரல் அடையாளங்களை பெற இதுவரை 14 நாட்கள் தேவைப்பட்டது. புதிய முறை மூலமாக 3 விநாடிகளில் கைவிரல் அடையாளங்களை பெற முடியும் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# நல்லிணக்கத்திற்கு அரசாங்கம் முனைப்பு



இலங்கை மீது தேவையற்ற அழுத்தங்களை பிரயோகிக்க சில தரப்பினர் முயற்சித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பீ.எம். ஹம்சா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகள் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்படு;ம் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை குற்றவாளியாக்கும் முனைப்புக்களில் சில தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பக்கச்சார்பற்ற தன்மை குறித்த சந்தேகங்களை எழுப்பி விடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மெய்யான நல்லிணக்கத்தை எற்படுத்துவதில் அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணகத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், தீர்மானம் நிறைவேற்றப்படுவதனால் நேர் எதிர்விளைவுகளே ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு எது நல்லதோ அதனை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நல்லிணக்க செயற்பாட்டை மேம்படுத்த இலங்கையுடன் தென்னாபிரிக்கா

இலங்கையில் தனது நல்லிணக்க செயற்பாட்டை ஒரு படி மேலே கொண்டுசொல்லும் வகையில் நல்லிணக்க செயன்முறை தொடர்பாக இலங்கையுடன் செயற்படுவதற்கான விசேட தூதுவராக சிரில் றம்போஷவை தென்னாபிரிக்கா நியமித்துள்ளது என அமைச்சரொருவர் தெரிவித்தார்.

வெள்ளையர் அரசாங்கத்துடன் 1991ஆம் ஆண்டு நிறப் பாகுபாட்டை முடிவுக்கு கொண்டுவந்த பேச்சுவார்;த்தையில் ஆபிரிக்க னதுக்குழுவிற்கு சிரில் றம்போஷ தலைமை தாங்கினார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் தென்னாபிரிக்காவிற்கு மேற்கொண்ட இலங்கை னதுக்குழுவினர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை தங்கியிருந்து பல உயர்மட்ட சந்திப்புக்களை மேற்கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த குழுவில் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா, வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் அருண் தம்பிமுத்து ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

(11ம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா சவால்கள்: வெற்றிகொள்ள தயார்!

ஜெனீவா சவால்களை எதிர்நோக்கத் தயார் என அரசாங்கம் அறிவித துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா தலைமையிலான நாடுகளினால் முன்வைக்கப்பட உள்ள தீர்மானத்தை எதிர்நோக்கத் தயார் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தீர்மானத்தை வெற்றிகொள்ளக் கூடிய வகையிலான தந்திரோபாயங்கள் வகுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தீர்மானம் தொடர்பில் 47 உறுப்பு நாடுகளுடனும் இலங்கையின் நிலைப்பாடு பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலும், இலங்கைக்கு ஆதரவாகவும் மற்றுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.அமெரிக்க ஆதரவு தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் ஏற்கனவே இலங்கையின் முக்கிய அமைச்சர்கள் நட்பு நாடுகளுக்கு விஜயம் செய்யத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அழுத்தங்களை எதிர்நோக்கத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுயாதீன விசாரணைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென நவனீதம்பிள்ளை கோரியிருந்தார்.



எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயம் தொடர்பில் நவனீதம்பிள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கைக்க பதிலளிக்கும் வகையில் அமைச்சர் பீரிஸ் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுயாதீன விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனை அரசாங்கம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான ஜெனிவாவின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஊடாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org